

# தென்மொழி

## பொன்விழாக் கொண்டாட்டம் ஒருகேடா?

இந்தியா விடுதலைக்குப் பொன்விழாக்
கொண்டாடும் முனைப்பி லான
சந்தமிகு பாடல்களும் ஆடல்களும்
களியாட்டும் அன்றி மற்று
முந்தைநாள் நிலைவிட்டு மக்களுக்கு
வாய்த்திருக்கும் முன்னேற் றங்கள்
எந்தவகை யானவென எடுத்துரைக்கப்
புகினெல்லாம் விளம்பரங்கள்!

வழிவழியாய் உழைத்துவருஞ் சரவடியைச்
சேர்ந்தவர்கள் வருவா யின்றி
அழிபசியைத் தாமாற்ற மாட்டாமல்
ஐம்பதுரு வாய்க்குத் தங்கள்
விழியனைய நன்மகவை விற்கின்ற
இழிநிலையில் இருக்குங் காலை
எழிலார்ந்த பொன்விழா வேடிக்கை
ஒருகேடா எண்ணிப் பாரீர்!

வெள்ளையர்கள் சென்றாலும் வேறான
நாட்டவர்கள் திட்டமிட்டுக்
கொள்ளைகொள ஈண்டுவந்து முதலீட்டால்
தொழில்வணிகம் பெருக்குகின்றார்
உள்நாட்டார் உறுதொழில்கள் வேரறுக்கப்
படுகின்ற நிலைமைகண்டும்
ஒள்ளியசீர்ப் பொன்விழாக் கொண்டாட்டம்
ஒருகேடா உணர்ந்து பாரீர்!

— இறை

### உள்ளே...


அடாவடி அரசியற் போக்குகள்!

தோழர் – தோழியர்

வெந்தியின் பட்டு வலை!

தமிழில் பதிவு எண்கள் செய்ததும், செய்யவேண்டியதும்.

தென்மொழியின் தொண்டில் பொதுமையியல்

மக்களவை (சிறுமைப்படுத்தப்படும் சித்த மருத்துவம்)

செய்திகள்



சுவடி - 30
ஓலை - 8
விலை உரு. 4-00

தூய தமிழ் இலக்கியத் திங்களிதழ்

தி.பி. 2029 மடங்கல் (ஆகத்து - 1998)



# தமிழுணர் வில்லாத பிறவிகளைப் போற்றாதீர்!

தமிழ்மொழியின் வளர்ச்சிக்கும்,
தமிழினத்தின் எழுச்சிக்கும்
தமிழ்நிலத்தின் விடுத லைக்கும்,
குமிழ்க்காத வெறுநெஞ்சும்—
கூறாத தோல்வாயும்—
குதித்தெழா மரத்தின் காலும்—
சிமிழ்க்காத புண்கண்ணும்,—
செய்யாத கூன்கையும்
சினக்காத வெற்று ணர்வும்—
இமிழ்க்கின்ற கடல் நிலத்துள்—
எங்கோவோர் வெற்றிடத்தில்
எவ்வுருவோ டிருக்கு மாயின்,

அவ்வுருவைத் தமிழுருவாய்—
அவ்வுடலைத் தமிழுடலாய்—
அவ்வுயிரைத் தமிழி னுயிராய்—
எவ்வகையும் கொள்ளாதீர்;
எம்மதிப்பும் கொடுக்காதீர்;
எவ்வழியும் இணைசெய் யாதீர்!
ஒவ்வாதீர் அதன்பேச்சை;
உரையாதீர் அதனிடத்தில்;
உறையாதீர் அதனோ டென்றும்!
செவ்வகையிற் பிறந்திருக்கும்
செம்பிறவி என்றதனைச்
சிறிதேனும் போற்றி டாதீர்!

தசைத்திரளை யாய்மதிப்பீர்!
தான்தோன்றி யாய்நினைப்பீர்!
தமிழினத்தில் தவறித் தோன்றி
வசைக்குரிய இழிவுருவாய்
வாய், மூக்கு, கண், காது
வைத்தவெறுஞ் சடலம் என்றே,
இசைத்தெண்ணி அதைத்தவிர்ப்பீர்!
எச்செல்வம் எவ்வறிவோ
டிருந்திடினும் இகழ்ந்து செல்வீர்!
திசைத்துலவும் இவ்வகையில்
தமிழரென்று பலபிறவி
திரிதருமால் தேர்ந்து கொள்வீர்!

— பாவலரேறு பெருஞ்சித்திரனார்
(தென்மொழி, சுவடி : 24; ஓலை : 10)



"கெஞ்சுவதில்லை பிறர்பால்! அவர்செய் கேட்டினுக்கும்
அஞ்சுவதில்லை; மொழியையும் நாட்டையும் ஆளாமல்
துஞ்சுவதில்லை;" எனவே தமிழர் தோளெழுந்தால்
எஞ்சுவதில்லை உலகில் எவரும் எதிர்நின்றே.


*(நிறுவனம் தி.பி.1990 (1959)*

**நிறுவனர் : பாவலரேறு பெருஞ்சித்திரனார்**




**தென்மொழி**

மொழி—இனம்—நாடு

**நம்மூச்சு, நோக்கம், கொள்கை, முயற்சி!**

இந்தியா ஒன்றாக இருக்கும் வரை இந்து மதம் இருக்கும். இந்து மதம் இருக்கும் வரை தமிழர்களும் இந்துவாகவே இருக்க வேண்டும். தமிழர்கள் இந்துவாக இருக்கும்வரை மதப் பூசல்களும் குலக் கொடுமைகளும் அவர்களை விட்டு விலகவே முடியாது. மதப் பூசல்களும் குலக்கொடுமைகளும் அவர்களைவிட்டு விலகாதவரை, ஆரியப் பார்ப்பனரின் வஞ்சகத்திலிருந்தும் மேலாளுமையினின்றும் தமிழன் மீளவே முடியாது. அத்தகைய பார்ப்பனியப் பிடிப்புகளிலிருந்து தமிழன் மீளாதவரை, தமிழ் மொழி தூய்மையுறாது; தமிழினம் தலைதூக்காது; தமிழ்நாடு தன்னிறைவு அடையமுடியாது. எனவே, இந்து மதத்தினின்றும், மதப்பூசல்களின்றும், ஆரியப் பார்ப்பனியத்தினின்றும் விடுபட வேண்டுமானால், நாம் இந்திய அரசியல் பிடிப்பினின்றும் விடுபட்டேயாகல் வேண்டும். ஆகவே தமிழக விடுதலைதான் நம் முழுமூச்சு, நோக்கம், கொள்கை, முயற்சி என்று தமிழர் ஒவ்வொருவரும் உணர்தல் வேண்டும்.


**ஆசிரியர் : தாமரை பெருஞ்சித்திரனார்**

**சுவடி. 30) திபி. உ0உகூ - மடங்கல் (ஆகத்து-'98) (ஓலை. 8**


# அடாவடி அரசியற் போக்குகள்!

மேனாள் தலைமையமைச்சர் இராசீவ் கொலைசெய்யப் பட்டது தொடர்பான செயின் குழு அறிக்கை, அதன்மீதான நடவடிக்கைக் குழு அறிக்கை, (அவ்வறிக்கை பற்றிய ஆய்வுக்குழு, அக்குழுவின் திருத்தம் – சேர்க்கை), பன்முனைக் கண்காணிப்பு உசாவற்குழு, இவற்றின்மீது பல்வேறு கட்சித் தலைவர்களின் கருத்துகள் என்று தில்லி அரசியல் வட்டாரத்திலும் தமிழ்நாட்டிலும் புழுதி பரப்பிக்கொண்டிருக்கையில் இன்னொரு உசாவற்குழு அறிக்கை பற்றிய செய்தி நம்மை வியப்புக்கும் அதிர்ச்சிக்கும் உள்ளாக்குகின்றது!

மும்பையில் கடந்த ஐந்தாண்டுகளுக்கு முன் பல அடுக்கு மாடிக் கட்டடங்களைத் தரைமட்டமாக்கி, ஈராயிரம் பேரைப் படுகொலை செய்த குண்டு வெடிப்புப் பற்றி உசாவல் நடத்தி ஆராய்ந்த நடுவர் கிருட்டினா குழுவின் அறிக்கை, இந்துக்களுக்கு எதிராக இருப்ப தாகவும் இந்தியா முழுவதும் இந்துக்களுக்கு மாறான கருத்தைப் பரப்ப அது பயன்பட்டுவிடும் என்றும் பிறவா..றும் கூறி, மராட்டிய மாநிலச் சிவசேனை – பாரதீய சனதாக் கட்சிக் கூட்டணி அரசு அவ்வறிக்கையைப் புறக்கணிப்பதாக அறிவித்துவிட்டது.

மும்பைக் குண்டுவெடிப்பு – படுகொலை பற்றி உசாவுதற்குக் கிருட்டினா குழு அமர்த்த..பட்டதும் பின்னர் அது கலைக்க..

பட்டதும் அது மறுபிறவி யெடுத்து மீண்டும் பணிமேற்கொண்டு அறிக்கையளித்ததும் அவ்வறிக்கை சட்டமன்றத்தின்முன் வைக்கப் படாமலே ஆனமட்டுங் காலங்கடத்தி இழுத்தடிக்கப்பட்டதும் தவிர்க்கமுடியாத நிலையில் அது சட்டமன்றத்தின் ஈரவைகளின் முன்னும் வைக்கப்பட்டதும் அதனை ஏற்கமறுத்து – புறக்கணிப் பதாக அரசு அறிவித்திருப்பதும் பிறவும் விறுவிறுப்பு மிக்க சுவையான நிகழ்ச்சிகள்! நயன்மைத் துறை வரலாற்றில் உயரற மன்ற நடுவர் அளித்த அறிக்கை புறக்கணிக்கப்பட்டிருப்பது பெரும் பாலும் இதுவே முதன்முறையாக இருக்கும் என்று கூறப்படுகிறது.

ஈராயிரம்பேர் படுகொலை செய்யப்பட்ட கொடிய நிகழ்ச்சி எத்துணை எளிதாகக் கருதப்பட்டு, எவ்வளவு பொறுப்பற்ற முறையில் கையாளப்பட்டு, அதுபற்றிய அறிக்கை எப்படிப் புறக்கணிக்கப்பட்டிருக்கிறது!

கடந்த சில ஆண்டுகளுக்குமுன் சென்னை – கிண்டியில் உள்ள சிலையொன்றின் பீடத்தில் குண்டு வைத்து அப்பீடத்தின் முனைப் பகுதியை உடைத்துவிட்டதாகவும், தமிழீழத் தொடர்பாகத் தொடர்ந்து பொய்ச்செய்தி பரப்பிய தொலைக்காட்சி நிறுவனத்தைக் கண்டிக்கும் நோக்கில் கொடைக்கானல் தொலைக்காட்சி நிலைய மதிற்சுவர்மீது குண்டுவைத்து அச் சுவரின் ஓரிரு கற்களைச் சிதைத்து விட்டதாகவும் குற்றஞ்சாட்டி, அரசின் கணக்குப்படியே மொத்தம் மூவாயிரத்து ஐந்நூறு உருவா இழப்பு மதிப்புடைய அக்குற்றத்திற் கென்று இளைஞர்கள் நால்வர்க்கு வாழ்நாள் தண்டனையும், மற்றும் நால்வர்க்கு ஆண்டுக்கணக்கில் கடுங்காவல் தண்டனையும் கொடுக்கப்பட்டிருப்பதோடு, வாழ்நாள் தண்டனைக்காளான இருவர்க்கு, அவர்கள் உயரற மன்றத்தில் மேன்முறையீடு செய்திருந்த போதிலும் பிணையலில் வெளிவரவும் மறுக்கப்பட்டிருப்பதையும் எண்ணினால் நாம் எத்தகைய கொடுமையான அரசியற் சூழலில் நெளிந்துகொண்டிருக்கிறோம் என்பது வெளிப்படும்!

இன்னொரு பக்கம் இராசீவ் கொலைபற்றித் தொடர்ந்து நடை பெற்றுக்கொண்டுவரும் அமளிதுமளிகள்!

இராசீவைக் கொலைக்களத்துக்குக் கூட்டிவந்து, அந் நிகழ்ச்சி நேரத்தில் பதுங்கிக்கொண்டிருந்து பின்னர் வெளிப்பட்ட இந்தியப் பேராயக் கட்சியின் அற்றைத் தமிழ்நாட்டுத் தலைவர் வாழப்பாடி இராமமூர்த்தி, தி.மு.க. மீது திட்டமிட்டுப் பழிசுமத்தியமையால் அக் கட்சிக்காரர்கள் தாக்குதலுக்கு ஆளானதோடு, அவர்களுடைய வீடுகள், மன்றங்கள் வணிக நிலையங்களெல்லாம் அடித்தும் உடைத்தும் சிதைக்கப்பட்டன; தீக்கிரையாக்கி அழிக்கப்பட்டன!

கொலைத் தொடர்பாக வர்மா குழு உசாவல் ஒருபுறம்; செயின்

குழு உசாவல் மற்றொருபுறம்; காவல்துறையும் நடுவணரசின் சிறப்புப் புலனாய்வுக் குழுவும் தனி வழக்குமன்றமும், தனிச் சிறையுமெல்லாம் வேறொருபுறம்!

புலனாய்வு – உசாவல் என்னும் பெயரில் கொடுமைகளுக்கு ஆளானோர், இறந்தவர்கள் பலர். உலகமே முகஞ்சுளிக்குமளவுக்குப் பதினெண் அகவை நிரம்பாதவர்களும், பெண்பாலரும் உள்ளிட்ட இருபத்தறுவர்மீது குற்றஞ்சாட்டப்பட்டு அனைவர்க்குமே தூக்குத் தண்டனை!

செயின்குழுவின் இடைக்கால அறிக்கை என்னும் பெயரில் தேசிய முன்னணி அரசு கவிழ்ப்பு! இன்று இறுதியறிக்கை – நடவடிக்கை யறிக்கை என்னும் பெயரில் அரசியற் சூதாட்டம்!

அடடா, இராசீவன் உயிர்தான் எத்துணைப் பெரிது?! அவர் தொடர்பான தகரி (பீரங்கி) ஊழல், வைப்பகப் பணப் பதுக்கம், இவற்றுக்கும் பிறவற்றுக்கும் உடந்தையாய் இருந்தவர்களின் முறை கேடுகள் இன்னணவெல்லாம் இன்னமும் வெளிவந்துகொண்டிருக் கின்றன வென்பதே அவர் பெருமையைப் பறைசாற்றுமே!

இனி, இராசீவ் கொலைபற்றி ஒருபக்கம் காவற்றுறையும் சிறப்புப் புலனாய்வுத்துறையும் புலனாய்ந்துகொண்டிருக்கும் போதே, இன்னொருபக்கம் வர்மா குழுவென்றும் வேறொருபக்கம் செயின் குழுவென்றும் உசாவற் குழுக்கள் அமைப்பதும் ஒன்றையொன்று கண்டுகொள்ளாமலே ஆளாளுக்கு வாயில்வந்ததை உளறுவதும் கைபோன போக்கில் எழுதிவைப்பதுமென்றால் இஃது இந்திய ஒருமைப்பாட்டைவிடக் குளறுபடியானதும் இழிவானதுமன்றி வேறன்று!

சிறப்புப் புலனாய்வுப் பிரிவு தன் கைக்குக் கிடைத்த இருபத் தறுவர்மீது குற்றஞ்சாட்டுகிறது; அதை அப்படியே ஏற்றுக் கொண்டு மறுதலைக் கூற்றை ஒரு சிறிதும் பொருட்படுத்தாமல் குற்றஞ்சாட்டப் பட்டோர் அனைவர்க்குமே தூக்குத் தண்டனை யளிக்கிறது தனி வழக்கு மன்றம். செயின் குழு சுட்டிக்காட்டும் அயல்நாட்டு உளவுப் படைகளின் சூழ்ச்சி – பின்னணி, சிறப்புப் புலனாய்வுப் பிரிவுக்குப் பிடிபடவில்லை? அஃது என்ன புலனாய்வு? அப்படிப் பிடிபடாத போது 'நடுவர்' நவநீதத்தின் தீர்ப்பு நல்ல தீர்ப்பென்று கும்மாளமிட்டுப் பதவியுயர்வும் பெற்று ஓய்வுபெற்றபின்னும் வேறு பதவியடைந்திருக்கும் கார்த்திகேயன் செயல் கடைந்தெடுத்த கயமைத்தனம் என்பதன்றி வேறென்ன?

இராசீவ் கொலைசெய்யப்பட்டதற்கான பின்னணி, அவர் கையாண்ட கடைத்தரமான அரசியல்தானே! இவ்வெளிப்படை

உண்மை செயினுக்குத் தெரியாமல் இருக்கமுடியாது. ஆனால் இதைச் சொல்ல அவருக்குத் துணிவு உண்டா? இதைச் சொல்லாமல் இடைக்கால அறிக்கை யென்றும் இறுதியறிக்கை யென்றும் தடபுடல் செய்து அரசியற் சூதாட்டங்களுக்கு வழிவகுத்துக் கொடுத்ததல்லாமல் செயின்குழுவினால் வேறென்ன விளைவு ஏற்பட்டிருக்கிறது?

பல படிநிலைகளில் வழக்குமன்றங்கள், காவல்துறை, புலனாய்வுப் பிரிவுகளெல்லாம் இருந்தும் இவற்றுக்கும் அப்பால், அரசியல் ஆளுமைகொண்ட இத்தகைய குழுக்களே பெரிதுபடுத்தப் படுமென்றால், வழக்கு மன்றங்களும் பிறவும் எதற்காக?

காந்தியடிகள் படுகொலை செய்யப்பட்டது தொடர்பாக அமர்த்தப்பட்ட கபூர்குழு அறிக்கையின் அடிப்படையில் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது? அவரைச் சுட்டுக் கொன்ற இயக்கந் தானே இன்று பல்வேறு பிரிவுகளாகப் பிரிந்தும் வெவ்வேறு பெயர்களைத் தாங்கியும் நாடெங்கும் நச்சுமிலார்களைப் பரப்பி நிற்கின்றது? அதன் வீச்சுதானே இன்றைய மராட்டிய அரசின் கிருட்டிணாகுழு அறிக்கை புறக்கணிக்கப்படுவது?

மொத்தத்தில், இத்தகைய குழுக்களெல்லாம் உண்மையறியும் நோக்கத்துடனோ சிக்கல்களுக்குத் தீர்வுகாணும் நோக்கத்துடனோ அமர்த்தப்படுவன அல்ல. ஆறப்போடுவது, மறக்கஅடிப்பது, மூடி மறைப்பது, அரசியல் எதிரிகளைப் பழிவாங்குவது, அவதூறு பரப்புவது முதலானவற்றுக்கான உத்தியாகவே உசாவற் குழுக்கள் அமைகின்றன. இக்குழுக்கள் அளிக்கும் பரிந்துரைகளோ, ஏடல்களோ செயற்படுத்தப்பட்டனவா என்பது தேடிப்பிடிக்கப்பட வேண்டியநிலையில், அவை கண்டுகொள்ளப்படாமல் நெகிழவிடப் படுவதே வாடிக்கையாக உள்ளது!

ஒரு சிக்கல் வழக்குமன்ற உசாவலில் இருக்கும்போது, அச்சிக்கல் பற்றி எக்கோணத்திலாயினும் உசாவற்குழுக்கள் அமர்த்தப்படுவதோ அரசே கருத்தறிவிப்பதோகூட வழக்குமன்ற அவமதிப்பாகவே கொள்ளப்படவேண்டும். ஆனால், வழக்கு மன்றங்கள் இவற்றைக் கண்டுகொள்ளாமலே விடுகின்றன என்றால், அவை தன்னுரிமை யாக இயங்குகின்றன என்றோ, மக்கள் உரிமைகளிலும் நலன்களிலும் அக்கறையுடன் செயல்படுகின்றன என்றோ கருத இயலாது. இத்தகைய வழக்கு மன்றங்களின் தீர்ப்புகள் எந்த அளவுக்கு நயன்மையுடையனவாக இருந்துவிடும்!

மக்களை ஏமாற்றுகிற இத்தகைய அடாவடித்தனப் போக்குக ளுக்கு இடமான அரசியலமைப்பை மாற்றியமைக்கும் போராட் டங்களே, தீர்வுகளுக்கு வழிவகுக்கும்!

— இறை

# தோழர் – தோழியர்

**சொல்லாய்வறிஞர் ப. அருளியார்**

இயக்குநர், தூய தமிழ் – சொல்லாக்க அகரமுதலிகள் துறை,
தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர்.

**த**ன் நண்பன் ஒருவனைப் பண்டைய பாட்டுடைத் தலைவன் ஒருவன், தோழ! *(129:2)* எலுவ *(129:1)* நண்ப! *(129:1)* என்றவாறு– மும்முறையாக மூவகையிலாகக் குறிப்பிட்டுக் கூவியழைக்கும் அருமையான காட்சியொன்று குறுந்தொகையில் பதிவுற்றுள்ளது! இப்படியொரு பதிவுப் போங்கைக் கழக இலக்கியப் பரப்பிடத்தில் (சங்க இலக்கியத்தில்) எங்குமே காணவியலாது! அவ்வளவு அழகார்ந்த இவ்விளிகள் என்ன காரணத்திற்காகப் பயன்படுத்தப் பெற்றுள்ளன என்று எண்ணிப் பார்க்கையில், எனக்கு எரிச்சல் தான் ஏற்பட்டது!

ஒன்றுமில்லை!... பெரிய கடல் நடுவில், எட்டாம் நாள் பிறை நிலா எப்படித் தோன்றுமோ அப்படிப்பட்ட தோற்றத்தோடு பெரிய கூந்தலின் முற்பக்கத்தில் சிறிய நெற்றியையுடைய ஒருத்தியை நான் பார்த்தேன்!... அந்தக்காட்சியின்வழி – ஒரு பெரிய விளைவு – அதாவது, இக்கட்டு ஏற்பட்டுவிட்டது! காட்டினின்று யானை யொன்றைப் புதியதாகப் பிடித்துப் பிணைத்துக் கட்டிவைத்துவிட்ட நிலையில், நான் அவளிடம் நன்றாக மாட்டிக்கொண்டேன்! தவிக்கின்றேன்! அவள் நெற்றிக் காட்சியில், நான் தளைப்படுத்தப் பட்டுவிட்டேன்! – என்கிறான், அத் தலைவன்!

அவளின் நெற்றியைப் பார்த்தவுடனே, இவன் மாட்டிக் கொண்டதாகக் கூறும் இக்கதையையே – இதில் ஏதோ ஒரு பெரிய்ய இதைச் ..... சொல்வதைப்போலச் சொல்கின்றான், இந்தப் பாட்டுடைத் தலைவன்!

தோழா! நண்பா! எலுவா! – என்றவாறு இதற்காகவா, அடை மொழிகளையெல்லாம் அடக்கி நீளவிளித்திருக்கின்றான் இம் மடவன்(மடயன்) என்னும் மனக் கொந்தளிப்பிலும் நெஞ்சக் குமுறலிலும் துடித்தவாறே – கலித்தொகையைக் கையிலெடுத்தேன்!

அதில், தோழன் எனும் சொல் வருமிடத்தைத் தேடினேன். அதில் அச்சொல் பயிலப்பெற்றுள்ள முழுப்பாட்டினையும் தெரியாமல் படிக்கத் தொடங்கினேன்!

பரத்தையிடம் பாலியலாடிவிட்டு, ஒன்றுமே அறியாதவன்

போல, ஒருநாள் – தலைவியை நோக்கி வந்து நிற்கும் தலைவனைத் தலைவியானவள் கண்டபடி பாட்டுவிடுகின்றாள்!... அங்கு அப் பரத்தைகளிடம் ஆட்டமான ஆட்டம் ஆடிவிட்டு–ஒன்றுந் தெரியாத பாப்பன்(!) போலப் (பாப்பாவுக்கு ஆண்பால்) பாவையாகிய தன் உரிமைக் கிழத்தியின் முன்னால் மிகமிக அமைதியாக வாயடங்கி, மெய்யொடுங்கி மனமடங்கி குலைநடுங்கியவாறு நிற்கின்றான்!... பையன் பாவம்! (தலைவன்தான் – இங்குப் பையன் என்று என்னால் குறிப்பிடப்பெறுகின்றான்!...) அவள் விடும் அப் பெரிய பாட்டைக் கேட்டுக் கொண்டே அமைதியாக நிற்கின்றான்!

இத் தலைவனுக்கு – இவன் செய்த இழிவான செயலுக்குத் – துணைபோனார்கள் என்று – முதன்முதலாகத் தலைவனுடைய பாகனைத் திட்டத் தொடங்குகின்றாள்! (பாகன் அங்கு இல்லை!) கடுமையான சொற்கள் புறப்படுகின்றன! ‘பொறிபொறி’ என்று, பொறிந்து இவ்வாறு திட்டுவதற்கும் – வைவதற்கும் (தஞ்சை வழக்கில் மொழிந்தால்) வாசாப்பு (வசையாப்பு – என்பதைத்தான் இப்படி இங்குள்ள நம்மவர்கள் நீட்டி மடக்கி நெடுமைப்பட கூறு கின்றார்கள்!) நீட்டுவதற்கும் என்ன காரணம் ‘ஒன்றுமில்லை!’– என்றவாறு, சொல்லாமல் விட்டுவிட முடியாது!

அதாவது, பரத்தைகள் வீடுகளில் படுத்துக் கிடந்த இப் பையனுக்கு – அங்கங்கிருந்த பரத்தையர் மகிழ்ச்சியைத் தந்தவாறே சண்டையிடுவதையும் தொழிலாகக் கொண்டிருந்து வாய்ப்பு நேர்ந்த போது நிலைமைகள் முற்றியபோது – அவர்களின் அழகிய வளையற் கைகளால் – அக் கையுகிர்களால் (அதாவது நகங்களால்–) அல்லது பிற பொருள்களால் (கையில் அப்பொழுது கிடைத்த அரும்பொருள் எதுவோ, அது!) தொடர்ந்து பதம் பார்த்ததால் ஏற்பட்ட வடுக்கள் – அதாவது காயங்கள்... அதாவது காயத் தழும்புகள் – இவன் உடம்பில் பல இடங்களில் மிக வெளிப்படையாக முத்திரை குத்தப் பட்ட காட்சிகளாகவே தோன்றிநின்று சுடர்விடுவதைக் கண்டு விட்ட எரிச்சலே – இத்தலைவியின் இரைச்சலுக்கும், குரைச்சலுக்கும் அடிப்படைக் காரணம் என்பதை நாம் மறந்துவிடக்கூடாது! இங்கு, இதனைச் சொல்லித்தான் ஆகவேண்டும்!...

புலந்து – சினந்து அதன் காரணமாகத் – தாண்டவம் ஆடிய பயனாக வந்து வாய்த்து நிற்கின்ற தழும்புகளோடு மட்டும், அவன் காட்சி தந்துகொண்டிருக்கவில்லை! இன்னொரு விசைச் செய்தி யும் உண்டு! அவனின் கழுத்துப் புறத்தைச் சுற்றிலும், – சேர்க்கையின் போது ஏற்பட்ட கடுமையான இழுப்பு – பறிப்புகளால் பரத்தையின் கைவளையல்கள் கீறியிருந்தன! அவற்றை வாரி எடுத்துக்

கொள்ளலாம் என்ற அளவில், அவை மிகமிகத் தெளிவாகத் தென் படவே, தலைவிக்கு மேலும் 'கிர்ர்ர்ர்'' ஏறிவிட்டது! இன்னொரு மாமாவாக(!) முன்–இயங்கிய ஒரு பாணனைப் பற்றியும், "கன்னா பின்னா"–என்று கிழிக்கத் தொடங்கினாள்!...

இவ்வளவுக்கும் இடையில் – ஒருவகை மணம் தலைவனின் மார்புப் புறத்தினின்று தோன்றிப் பரவுவதை நுட்பமாக நுகர்ந் துணர்ந்து கொள்ளுகிறாள், தலைவி! அம் மணம்–அம் மணத்தோடு தொடர்புடைய மற்றுமொரு காட்சியை அவளுக்கு உறுதிப்படுத்தி விட்டது! அதாவது, இத் தலைவன் அப் பரத்தைமாருடைய கூந்தலாகிய படுக்கையில் படுத்துவிட்டு வந்ததால் – அப் படுக்கை யிலிருந்த மலர்த் தோய்வில் படிந்துவந்த மணம் இது!; அதுவும், படுக்கையிலிருந்து உடனேயே – அம் மணம் மறையா முன்னரேயே அப்படியே வந்துள்ளான் என்னும் உண்மையும் அவளுக்குப் பொறி தட்டிவிடுகின்றது. உடனே, அவள் திட்டுவதற்கு – வசைபாடுவதற் குரிய அடுத்த ஆளாகவே, –இவனின் **தோழன்** இவளின் நெஞ்சத் திரையில் நிழலாடத் தொடங்கிவிட்டான்! அவனைப் பற்றியும் ஒரு பிடி பிடிக்கின்றாள், தலைவனிடம்!...

"நீயோ, தீய குணங்களை உடையவன்! "நீ என்னைப் பிரிந்துவிட்டுப் பரத்தைகளிடம் ஓடிப் போனாய்!" என்பதைப் பிறரெல்லாம் அவனிடம் கூறியிருக் கின்றார்கள்! இருப்பினும் உன் தவறுகளைப்பற்றி ஒரு சிறிதும் கவலைப்படாமல் – அதுபற்றிச் சிந்தித்து – உன்னைத் திருத்த முயற்சி செய்யாமல், நீ ஏதோ பெரிய்ய 'நற்குணநாயகன்!' என்ற வாறு பலபடியாக உன்னைப்பற்றிப் பலரிடமும் பெருமையாகப் பேசி உயர்த்திக் கொண்டாடித் திரிகின்றானே, உன் தோழன்!... அவன் இங்கு வரமாட்டானா?... படுத்து வந்ததால் நீ எடுத்து வந்துள்ள இம் மலரும் மணத்தை – மலரும் மணத்தோடு கூடிய உன் அலர்ந்த மார்பைக் கண்டு உண்மையுணர்ந்து நாணுவதற்காக, அவன் இங்கு வரமாட்டானா?..." என்றவாறெல்லாம் இடிஇடியாக வெடிக்கின்றாள், இக் கலித்தொகைத் தலைவி!... (அப்பாடா!...)

இப் பாட்டில் வரும் தோழனின் பண்பாக இங்கு நமக்குப் புலப்படுவது, இதுதான்! 'தோழன்' என்பவன், தன் நண்பனின் தவறான நடத்தைகளைக் கண்டுகொள்ளாமல் – அவற்றைப் பெரிது படுத்தாமல் – இயன்றவரைக்கும் அவனைக் காப்பாற்றுவதற்கு – அவனை ஒரு திருத்தூயவராகவே (Mr. Clean) பிறருக்குக் காட்டிப் பெருமைப் படுத்திக் கொண்டிருக்கும் ஒரு பேருள்ளம் படைத்தவனாவான், என்பதே!

குறுந்தொகை – கலித்தொகை என்னும் இரு பருந்தொகைக ளையும், – சலிப்புத்தொகை கொண்டு – புறத்தில் தள்ளியவாறு, புறத்தைத் தூக்கி – அகத்தில் வைக்கத் தொடங்கினேன்! தோழனை நோக்கித் துரத்தலானேன்! முல்லைக்குத் தேர்ந்து உலகப் பெரும் புரட்சியைத்(!) தோற்றுவித்துவிட்டு – ஈகத்தை நிலைநாட்டிவிட்டுப் பறம்புமலைப் பாரிமன்னன் மறைந்தான்!... தன் பெண்மக்களுக்குத் திருமணம் செய்துவையாமலேயே அவனுக்கு மறைவு நேர்ந்து விட்டதால், – அக் கடமையைத் தானே முன்னின்று செய்து முடிக்க வேண்டும் என்றெண்ணிய புலவர் கபிலர், –'புலிகடிமால்' என்பானின் வழிவந்த நாற்பத்தொன்பதாவது தலைமுறையினனாகக் கருதப் பெற்றுவந்த 'இருங்கோவேள்' என்னும் மன்னனிடம் சென்று –"பாரியின் மகளிர், இவர்கள்! இவர்களின் தந்தையாகிய பாரிக்கு, நான் தோழன்! ("யானே தந்தை தோழன்!" (புறம் : 201 : 5-6). இம் மகளிரை உடனழைத்து வந்துள்ள நான் எளியன் அல்லன்!; புலவன்!... அதுவும் வெறும்புலவனல்லன்!... அந்தணப் புலவன்!... (புறம் : 201 : 7) என்றார்! அப்பாட்டைப் படிக்கும்போதும் கடுங் கொதிப்பானது என் கட்டுக்கடங்கவில்லை!...

பாரியின் மகளிரை – அப் பெண்களை ஆடு மாடுகள் போல ஓட்டிச் சென்றிருக் கின்றானே!, பாவி!... 'ஒரு மன்னனுக்கு ஒருத்தி' என்றவாறு முயற்சி செய்திருக்கலாமே!... என்றவாறெல்லாம் நெஞ்சம் துடிதுடிக்கவும் செய்தது! கபிலரின் கருத்தை ஏற்க மறுத்து – இருங்கோவேள் தலை திருப்பிக் கொள்கின்றான்! மறுபடி, நொந்த நெஞ்சொடு ஒரு பொருமல் பாட்டுப் பாடிவிட்டுப் பாரிமகளிரை ஓட்டிச் சென்று விடுகின்றார், கபிலர்! (காண்க : புறம் : 202).

இப் பாட்டில் வரும் 'தோழன்' (கபிலத்தோழன்) தன் தோழனின் மறைவுக்குப் பின், அவன்பால் அன்று கொண்டிருந்த தோழமை காரணமாக அம் மன்னனுக்கு உரியவாகவிருந்த கடமைகளைத் தான் செய்துமுடிக்க முனையும் நன்றியுணர்வுப் போக்கை நமக்கு முன்வைக்கின்றான்!...

கழக இலக்கியத்தில் காட்சி தந்த – குறுந்தொகைத் தோழன் – காதலியின் கருங்கூந்தலில் மறைந்து கிடந்த சிறிய நெற்றியழகில் மயங்கித் தளைப்பட்டுவிட்ட (கைது செய்யப்பட்டுவிட்ட) நிலைமையை நண்பனொருவன் அறிவிக்க அதனைக் கேட்டுக் கொண்டு பேசாது கிடக்கின்றான்!...

அடுத்த, கலித்தொகைத் தோழன் – குடும்பத்தினின்று – தன் நண்பனின் மனைவியாகிய குல மகளிடமிருந்து அகன்று, 'தப்புத்

தாண்டு' (அதாவது, தப்புத்தண்டா) மேற்கொண்ட தறிதலை ('தறிதலை' – என்றால் 'வெட்டப்பெற்ற தலை' என்று பொருள்! 'முண்டம்' என்பது அதன் முழுப் பொருள்! அதைத்தான் 'தறுதலை' என்றவாறு மறுதலையில் கூறி மகிழ்ந்து வருகின்றோம்!..) ஆகிய தலைமகளாகிய தன் நண்பனையே பிறரிடம் பெருமைப்படுத்திக் கொண்டாடி மகிழும் போக்கினனாகப் புன்னகை பூக்கின்றான்!

அதற்கும் அடுத்துப், புறத்தில் நிற்கும் புலவனாகிய – அதுவும் அந்தணப் புலவனாகிய கபிலன் –(அதாவது, இங்குத் தோழன் என்ற முறைமையில் பாடிக்கொண்டே வருபவன்!...) நண்பனின் இறப்புக்குப் பின் நன்றியுணர்வொடு அவனாற்ற வேண்டியிருந்த குடும்பக் கடமைகளைத் தான் மேற்கொண்டு அதற்கென முயலும் அன்புப் பான்மையுடையவனாகக் காட்சி காட்டுகின்றான்.

இம் முத் தோழர்களையும் முன்னரேயே கண்டுவிட்ட களைப்பால் – களைப்பின் இளைப்பால் கலக்கமான சூழ்நிலையில் நான் அயர்ந்து நின்றபோது, அடுத்துள்ள ஒரேஒரு தோழனைக் காணலாமா? வேண்டாமா? – என்ற தயக்கத்துடனேயே, என் எதிரிலிருந்த புறநானூற்று நூலின் 275-ஆம் பாடலில் கண்பதித்தேன்!

அங்கு, – மிக வேறுபாடமைந்த – வீறமைந்த – அரிய திற லாண்மை சான்ற தோழன் ஒருவன்.... விரைய விரைய – வேகவேக மாகத் தடைகளையெல்லாம் உடைத்துக் கொண்டு பீறிட்டு ஓடும் பீடுநிரம்பிய பெருமிதக் காட்சிகண்டு அதில் மிதந்தேன்! கண்கள் அகலித்தன! என் குருதியோட்டத்தில் ஓர் உறுதி! உயிரிலொரு உயர்ச்சி!... மனத்திலொரு மகிழ்ச்சி!... உள்ளிலொரு துள்ளல்! நினைவிலொரு நெடுநிலை! நெஞ்சிலொரு நிறைவு!... அடடா! அடாடாடா!... ஆ!ஆ! அவன் ஓடுஓடு என்று ஓடிக் கொண்டே யிருக்கின்றான்! என்னின் கண்கொள்ளாக் கவின்காட்சி, அது!

கொடுமையான போர்க் காட்சி!... போர்க்களம் அங்கு அமளி குமளிபடுகின்ற கொடிய சூழல்!... பகைவர்கள் சூழ்ந்து செறிந்துள்ள பின்னணிப் படையில், அதனையே பிளப்பதுபோல – அவ்வீரன் துளைத்து உட்புகுகின்றான்! பகை மறவர்கள் அஞ்சி அலறு கின்றனர்! அவன் கையில் – கூரிய, நீடிய, சீரிய வேல்! சீறிய வேளாய், இவன் மீறிமீறி மேற்செல்லுகின்றான்! இவனைத் "தடுத்து நிறுத்துங்கள்! தடுத்து நிறுத்துங்கள்!" என்றவாறு அப் போர்க்க ளத்தில் பகைவர்களின் பக்கத்தினின்று பேரொலி எழுகின்றது! அவனை எவனாலும் தடுக்கவே முடியவில்லை! அவன் தடைகளை யெல்லாம் உடைத்தெறிந்தவாறு ஓடிக்கொண்டேயிருக்கின்றான்!

வழியிலெல்லாம் – இறந்துபட்ட மறவர்களின் உடலினின்று வெளிப்பட்ட குடல்களெல்லாம் இவனைத் தடையிட்டுத் தளைக் கின்றன! (அக் கடிய விரைவோட்டத்தில் குடல்களெல்லாம் கால்களில் பின்னிப் பிணைந்து – சிக்குண்டு அவை தொங்கத் தொங்க ஓடுகின்ற அவனின் புயலோட்டக் காட்சியைப் புலவன் எப்படி உவமிக் கின்றான், தெரியுமா?!.. தொடரியாகிய (சங்கிலியாகிய) தளைபூண்டு ஓடும் யானையைப் போன்று அவன் அங்கு ஓடிக்கொண்டிருக் கின்றான்!... என்கின்றான்!) அவனின் ஓட்டம் எப்படிப்பட்ட தன்மைத்தாக இருக்கின்றது? தன்னின் கன்றுக்குட்டி ஓர் இக்கட்டில் மாட்டிக்கொண்டு துயருறுகையில் – அதனை நோக்கி விரைந் தோடும் தாய்க்கறவையாகிய மாடுபோல் – இவன் அங்கு ஓடுகின்றான்! ('கன்றமர் கறவைமான' (புறம் : 275 : 8) எதற்காக இந்தத் தாய்க் கறவை – கன்று என்னும் உவமை?!...

அப் போர்க் களத்தில் அதன் முற்பகுதியில் இவனுடைய **தோழனைப்** பகைவர்கள் முற்றுகையிட்டவாறு சூழ்ந்துகொண்டு – வளைத்துக்கொண்டு தாக்கு கின்றார்கள் என்ற செய்தியை அறிந்தவுடன்தான், அவனுக்கு இப்படிப்பட்ட வேகம் எழுந்து வீறாடியுள்ளது! பகைவர் சூழ்ந்திருந்த தன் உயிர்த்தோழனோடு இப்போது உடன்சேர்ந்து விட்டான்!... இத்தோடு பாட்டு முடிந்துவிடுகின்றது!

யாருமே தடுக்கமுடியாத – எதுவுமே கட்டுப்படுத்திவிட முடியாத ஒரு பெருமைமிக்க தூய தோழமையுணர்வில் தோய்ந்து நிற்கும் வீரனாகிய நேர்மையாளன் ஒருவன், அங்குப் பகையைச் சிதற அடித்துப் புறங்காட்டி ஓடச்செய்து வினை முடித்திருப்பான் என்பதைப் புறப்பாட்டு மறைபொருளாகவே மூடிநின்று – முடிவைத் 'துடும்' எனத் தானே நிறுத்திக் கொள்கிறது!

தன் தோழனுக்கு ஓர் இக்கட்டு!... ஓர் இடைஞ்சல்!... ஒரு துன்பம்!... ஓர் இடர்!... ஓர் இடையூறு!... ஓர் இழிவுபடுத்தம்! ஒரு பழி!... என்றால் உண்மையான தோழமை யுணர்வுடையவன் இப் புறநானூறு கூறுவதைப் போலத் தோன்றுந் துணையாகித் தோள் தந்து மீட்பான்! இதில் எள்மூக்கத்துணையும் பிசகான்!

தோழமை உணர்வுதான் அனைத்து நலங்களையும் நல்கும்; அனைத்து வளங்களையும் வழங்கவல்லது! அத் தோழமையுணர்வு – அனைத்து உரிமைகளையும் காக்கும்! அனைத்து உரிமைகளையும் மீட்கும்! அனைத்துப் பகைகளையும் முரிக்கும்! அனைத்துச் சூழ்ச்சி களையும் எரிக்கும்! அனைத்துக் குழிபறிப்புகளிலும் மண்ணிட்டு

மூடும்! அனைத்துப் பழிகளையும் வழித்தெறியும்! துன்பம் துடைத்தூன்றும் தூணாக நிற்கும் அரிய பண்பு, –தோழமையுணர்வு! நட்புக்கு இலக்கணமாக வள்ளுவப்பெருந்தகை வழங்கிய அரிய வரையறுப்பு – மந்திரவரிகளுளொன்றாகிய 'இடுக்கண் களைவதாம் நட்பு' என்னும் கருத்தினுள் தோழமைப் பண்புக்குரிய சாறப் பொருளும் அடங்கியுள்ளது! நட்பினும் தோழமை வலிவுடையது! பயன்விளைப்பது! உரிமை மீட்பது! பகைவெல்வது! பணித்திறத்தை மிக மேம்படுத்துவது! மாந்த நேயத்தை மலர்த்தி வளர்த்தெடுப்பது, அது!

**துய்** : பொருந்துகைக் கருத்து மூலவேர்

துய் > தொய் > தோய் :

தோய் + தல் > தோய்தல் = ஒன்றுதல்

தோய்தல் = சேர்தல்; செறிதல் *(சீவக : 290)*

தோய்தல் = பொருந்துதல் *(புறம் : 14)*

தோய்தல் = அணைதல் *(குறள் : 917)*

தோய்தல் = கலத்தல் *(கம்பராமாயணம் : 27)*

தோய்தல் = ஒத்திருத்தல் *(மலைபடு : 558)*

தோய்ந்தார் : நட்பினர்

"தோய்ந்தாருள் தோய்ந்தார் எனப்படுவார்"

*(திரிகடுகம் : 82 : 2)*

தோய் > தோய் + அன் > தோயன் > தோழன்.
= நண்பன்; நன்றியோன்

தோய் > தோய் + இ > தோயி > தோழி

'தோழன்' என்ற வடிவம் கழக (சங்க) இலக்கியங்களில் நான்கிடங்களில் பயிலப்பெற்றுள்ளது. 'தோழர்' – என்னும் பலர்பால் பெயராட்சி, பழமொழியில் ஓரிடத்திலும் *(190 : 1)* சிறுபஞ்ச மூலத்தில் ஈரிடங்களிலும் *(36 : 1; 38 : 2)* பயிலப்பெற்றுள்ளது.

'தோழன்' என்னும் சொல், ஒருமை குறித்தது! தோழமை உணர்வு கொண்டு ஆழ்ந்த ஒருமை பூண்டு கழகமாக (சங்கமாக) – பேரவையாக – பேரவை உறுப்பாண்மையராக இயங்கும் ஒவ்வொருவரும் 'தனி–ஆள்' என்னும் தகைமையினின்று மேம்பட்டுக் கூட்டுத்தகைமையை இயல்பாகவே அடைகின்றனர். ஆதலால், – பலர்பால் ஈறாகிய 'அர்' ஈறு பிணைத்துச் சேர்த்தவாறு 'தோழர்' என்னும் பெயர்க் குறிப்பீட்டால் சுட்டவும் விளிக்கவும் பெறு

கின்றனர். 'தோழன்' என்பதைக்காட்டிலும்– 'தோழர்' என்பதிலேயே – கழகமாக, ஒன்றியமாக கூட்டாண்மை யாகச் செயற்படும் உறுப்பினர் என்னும் பொருண்மை பொருந்தி நிற்கின்றது!

'தோழர்' என்பதனை ஆணுக்கும் பெண்ணுக்கும் பொதுப் படவே வழங்கப்பெறும் நிலை – பொருந்திய ஒன்றாகப் படவில்லை! அது மரப்புக்கும் உரிய உறவுக்கும் பொருந்திவாராது. நம்மிடம் பெண்பாலியருக்கெனத் 'தோழியர்' என்னும் நல்ல – வல்ல – மெல்லிய சொல்லாட்சி ஈராயிரம் ஆண்டுகட்கும் முன்னீடாக விருந்தே பயில்விலும் பதிவிலும் தொடர்ந்து வருகின்றது! இதனைத் தெளிவாகப் பயன்படுத்தும் போக்கும் நமக்கு வேண்டும். *(காண்க: கலித்தொகை: 57: 21–24) (பரிபாடல்: 24–26)*

'தோழர்' : 'தோழியர்'

ஆணுக்கும் பெண்ணுக்கும் சமவுரிமை வேண்டும் என்பதாகவும் – இருவர்க்குமிடையேயும் வேறுபாடு இருத்தலாகாது என்பதாகவும் – இவ்விடத்தில் குழப்பலாகாது! ஆண் – பெண் என்றவாறு தனித்தனி வேறுபாட்டுக் குறிப்பீட்டுச் சொற்களே இருத்தலாகாது என்பது போன்ற அடாஅடி (அடாவடி) அது!

'தோழர்' என்பதைப் போலவே, 'தோழியர்' என்றவாறான நேரிய சொல்லால் அவர்களை மதிப்புறக் கூறப்பெறுவதில் – அவர்களைச் சிறப்புற ஈடாகப் பெருமைப்படுத்தும் இயற்கை நேயமும் பண்பான்மை யும் இழையோடி நிற்கின்றன, என்பதை ஆழ்ந்து கருதிப்பார்த்தல் வேண்டும்!

'தோழர்' என்றும் 'தோழியர்' என்றும் இன்று சிறப்புற – மதிப்புற வழங்கிவரும் நடைமுறைச் சொற்கள், இவ்வகையிலான கனிவுற்ற பெரும்பொருண்மை கொண்டு, நம் தமிழகத்தில் வழங்கத் தலைப்பட்டதெல்லாம் – இந் நூற்றாண்டின் தொடக்கத் திலிருந்துதான்!

தென்னிந்தியாவில் முதல் பொதுவுடைமைக் கருத்துப் பரப்பாளி யாகவும், தொழிற்கழகப் போராளியாகவும் வாழ்ந்து – சிறந்த எடுத்துக் காட்டாளராக நின்று – நிலைப்பணிகளைத் தொடங்கிய தோழர். சிங்காரவேலு அவர்கள் இச்சொல்லாட்சிக்கு வலிவும் இருப்புக்கு வழிகோலுகையும் உருவாக்கியவர்! அதனை நிலைநிறுத்திப் பயன் படுத்திய வகையிலர்கத் திரு.வி.க., தந்தை பெரியார், தோழர் சீவானந்தம் போன்றோரையும் பிற வெளிமுக – மறைமுகப் பொதுவுடைமைத் தோழர்களையும் கருதுதல் வேண்டும்!

'Comrade' என்னும் ஆங்கிலச்சொல் நமக்குப் புழக்கத்திலும் பழக்கத்திலும் வருதற்கு இருநூற்றாண்டுகளுக்கு முற்பாடேயே – 16-ஆம் நூற்றாண்டிலிருந்தே 'Comarade' (Camerade) என்னும் பிரஞ்சுச் சொல் உலகிற்கு அறிமுகப்படுத்தப்பெற்றுவிட்டது. பிரஞ்சுமொழியில் இப் பொருளூட்டம் வந்தது, இசுப்பானிய (SPANISH) மொழியிலிருந்து என்பதையும் நாம் உணரவேண்டும். அச்சொல் 'COMRADA' என்பதாகும். இச் சொல், பிரஞ்சு மொழியுள் படிவெய்திப் பயன்படுத்தத் தொடங்குகையில், பெண்பாற் சொல்லாக மட்டுமே சுட்டப் பெற்றது. பின், கருத்து வளர்ச்சியிலும் விளர்ச்சியிலும் பொதுப்படக் கரைந்து முறைப்பொருண்மை வாய்ந்தது!

இதன் வளர்ச்சி முறையாவது:

(GREEK) Kamara = *(மூடப்பெற்ற அறை)*
(GREEK) > (LATIN) Camera
(LATIN) > (ITALY) Camera
(SPANISH) (PORTUGUESE) Camara
> (FRENCH) Chambre = (Chamber = அறை)

இலத்தீனம் வழியாக இத்தாலி மொழிக்கும் இத்தாலி மொழியினின்று இசுப்பானிய மொழிக்கும் சென்றபின், – அவ் இசுப்பானிய மொழியில் வழங்கிய 'CAMRADA' என்னும் சொல்லுக்கு 'அறை நிரம்பிய' (Chamberful) என்றவாறே பொருள் வழக்கமுற்றிருந்து, பின்னர் – அது, அறையில் 'உடன் உறைபவர்' (Chamber–mate) என்னும் பொருட்பாட்டிற்கு விரிவெய்தியது. பிறகு, – அப்பொருட் பாடும் படைத்துறை அறை நண்பனாகவும் – பாசறை நண்பனாகவும் வளர்ந்து புடைநிரம்பி – இறுதி நிலைக்கு முன்னீடாக 'உடன் படைஞன்' என்னும் பொருட்பாடுறப் பொலிந்தது! நிலையிறுதியாகக் – கழகத்தில் உறுப்பாண்மையுற்ற – உரிமையுணர்வும் நேயமும் நிரம்பிய 'கூட்டுறவினன்' என்னும் பரும்பொருளுக்கு விரிந்து வழங்கிவரப் பெறுகின்றது!

இம் மேற்குறிப்பிட்டுள்ள அனைத்து நிலைகளையும் விஞ்சிய ஓர் அரிய இனிய மரபொழுங்கு, நம் தோழரில் தோழியரில் ஒளிர்வதைக் காணலாகும்! ஓ!... நம் தோழரே! தோழியரே! உங்கள் ஒற்றுமை மேன்மேலும் இறுக்கமாகட்டும்! உங்கள் நேரிய முயற்சிகள் இடையீடின்றித் தொடரட்டும்! அதிகார அடக்குமுறைகள் எங்கிருந் தாலும் அவை உங்கள் கூட்டுறவாண்மையால் மாயட்டும்! உங்கள் நேயங்கள் நம் அனைவர் நலனுக்குமாகப் பாயட்டும்!!..... ○

# சிலந்தியின் பட்டு வலை!

ஆங்கிலம் : டி. பாலசுப்ரமணியன். தமிழ் : **'தமிழம்' பன்னீர்**

சிலந்தி (Spider) என்றால் ஒருவாறு மாந்தனுக்கு இருவகை உணர்வுகள் தோன்றும். நஞ்சுள்ள சிலந்திகள் நம்மைக் கடிப்பதால் அல்லது கொட்டுவதால் நாம் அச்சமும் அருவருப்பும் அடைகிறோம். எல்லாச் சிலந்திகளுமே பதுங்கி வாழ்பவை. அவை பறக்கும் பூச்சிகளை வலை விரித்துப் பிடித்து அவற்றை உடனடியாக உண்பதைத் தம் ஒரே தொழிலாகக் கொண்டுள்ளன.

மற்ற வகையில் சிலந்திகள் பின்னும் வட்ட மென்வலை நம்மைக் கவர்கிறது. அது ஒரு பொறியியல் புதுமை! அது கலைஞர்கட்கு மகிழ்ச்சி யூட்டுகிறது. சில அந்துப் பூச்சிகளும் (Moths) பட்டுப் பூச்சிகளும் பயன்படுத்தும் அதே புரதம் (Protein) அதில் இன்றியமையாப் பொருளாக உள்ளது. பருத்தி அல்லது மரயியல் நார் (Cellulos Fibre), தொய்வம் (Rubber), அதிவிரைப்பும் வலிவும் கொண்ட எஃகு (High Tensile strength) அல்லது அதி வலிவு மீச்சேர்ம இயற்பொருள் (Super Strong Polymeric Material) ஆகியவற்றை மிஞ்சும் அது ஒரு கவர்ச்சி மிக்க பொருள்.

சிலந்தி வலை இழையுடன் எலும்பு, குதிகால் தசைநாண் ஆகிய வற்றை ஒப்பிட்டால், பின்னவை வலிவற்றவை ஆகின்றன. சிலந்தி வலை இழையின் ஆக்கப் பொருள்கள்மீது அண்மையில் நடத்தப் பெற்ற ஆய்வுகளால், அதன் இயக்கத்திற்கு உகந்தவாறு அதை ஆக்கும் கவர்ச்சி மிக்க பல கருத்துகள் வெளியாயின. மர். பிரிட்சு வோல்ராத்து (Dr. Fridge Vollrath) என்பவர் பல ஆண்டுகள் சிலந்தி வலைபற்றி ஆராய்ந்தார். அதன் பற்றுவலை (Capture Web) ஆக்கத்தில் நீரின் பங்கு, நெகிழ்வுத் திறம் (Elasticity) பயனுறுதி (Efficiency) ஆகியவற்றைக் கண்டறிந்தார்.

**தொடக்க உயிரினம்:**

உலகின் காட்சிப் பரப்பில் (Panorama) சிலந்தி அண்மைக் காலத்தில் புகுந்த உயிரினம் ஆகும். அது 40 கோடி ஆண்டுகளுக்கு அதிகப்படாமல் தெவோனியன் (Devonian) ஊழிக் காலத்தைச் சேர்ந்ததாகவும் இருக்கலாம். நடமாடும் இரை சிக்குவதற்கு அதை இடறவைக்கும் (Tripline) இழையாகவும், தன் முட்டையை மூடப் பயன்படும் போர்வையாகவும், வாழும் பொந்துக்கும் (Burrow) அதன் வாயிலுக்கும் இடும் உள்ளுறையாகவும் பயன்படுத்திய ஓர் அடிப்படைப் பட்டிழையை உண்டாக்கி நிலத்தின் மேலும், வளையிலும் வாழ்ந்திருந்தவை அதன் முன்னோர்களாய் இருக்கலாம். அந்த 'தெவோனியன்' சிலந்தி இன்று காணப்படும் சிலந்தி வகையை ஒத்து, தன் கால்கள் தனித் தனிப்

பிரிவுகளாகத் தொடக்க நிலையில் அமைந்து, கீழே குந்திக் காத்திருந்தும், குழாய் அல்லது வளை போன்ற இடங்களில் அமர்ந்திருந்தும் உயிர்களைக் கொன்று தின்றதாக வில்லியம் சீயர் (William Shear) தம் ஆய்வில் கண்டறிந்தார். அது, தன் வயிற்றுப் பட்டுச் சுரப்பியில் இருந்து அப்பொழுதுதான் சுற்றுப்புறங்களில் வலையை (Aerial Web) அமைத்திருக்கக்கூடும். தன் வயிற்றில் உள்ள நூற்புறுப்பால் (Spinneret) அது இழை நூற்றதன் மூலம் சிலந்தி இனத்திற்கே பெருத்த முன்னேற்றத்தைத் தோற்றுவித்து இருக்கலாம்.

**காற்றில் உணவகம்:**

நாம் தோட்டத்தில் காணும் சிலந்தி தன் சுரப்பி, நூற்புறுப்பு ஆகியவற்றால் குறைந்தது ஏழு வெவ்வேறு வகைகளில் பட்டு இழையை நூற்கிறது. அது அமைக்கும் வட்ட மெல்லிழைப் பற்று வலையானது, (Capture Web) சட்ட இழை (Frame Silk) அல்லது கட்டமைப்பு நார் (Structural Fibre) ஆகியவற்றால் ஆன ஆதார ஆரைகளின் (Radical Spokes) வெளிமுனைகள் தகுந்த இடங்களில் பொருந்தி, ஒரே நடுவங் கொண்ட பல்வட்ட அமைப்புக் கொண்டது. ஓர் ஊடிழையைப் (Dragline) பயன்படுத்திச் சிலந்தி, வலைக்குள் தானே இறங்குகிறது. சட்ட இழையும் ஊடிழையும் பெரும்பாலும் ஒன்றே. சிலந்தி இவற்றைத் தன் காதுமடலுருச் சுரப்பிகளால் (Ampulateglands) பின்னுகின்றது. பற்றும் இழை கசையுருச் சுரப்பிகளின் வழி (Flaggelliform Glands) வெளிவருகிறது. ஆரை இழைகள் எஃகைவிட வலிமையானவை. ஒரு தனிப்பட்ட பசை வட்ட இழைகளுக்கு அதிகத் தொய்வுத் தன்மை தருகிறது.

காற்றாடி நூலில் பூசுகின்ற (GOAT) 'மாஞ்சா'வை ஒத்த ஒரு தனிப் பசை, கூட்டுச் சுரப்பிகளில் (Aggrigate Glands) சுரக்கிறது. அது பற்றும் இழைகளில் பூசுப் பெறுகிறது. அந்தப் பசைத் துளிகள் பற்றும் இழைகளில் முத்துக் கோத்தாற்போல் ஒழுங்கான புள்ளிகளாய் அமைகின்றன. அவை காலைப் பொழுதின் பனி ஈரத்தில் புடைத்து மினுமினுக்கின்றன. அந்தப் பூச்சுதான் இழைகளுக்குப் பிசுபிசுப்பும் ஒட்டும் தன்மையும் தருகிறது. அது கட்டமைப்பு இழையிலும், ஊடிழையிலும் பூசப்பெறுவதில்லை. அதற்கு மாறாகக் குமிழ் போன்ற சிறு சுரப்பிகள் உண்டாக்கும் துணை நார்களைக் கொண்டு அவை வலிவூட்டப் பெறுகின்றன.

சிலந்தியின் பேரிக்காய் உருச் சுரப்பிகளில் (Piriform Glands) உருவாகும் கட்டமைப்பு இழை நேர்த்தியான வலை பின்ன உதவுகிறது. அந்த இழை, சட்ட இழையையும், ஊடிழையையும் மரக் கிளை அல்லது அதன் மிலாறு (Twigs) அல்லது வேறு ஏதேனும் ஒன்றில் பிணைக்கிறது. கொடிமுந்திரி உருச் சுரப்பிகளில் (Aciniform Glands) உண்டாகும் ஒருவகைப் பட்டிழை, வலையில் அகப்பட்ட இரையை

உறையிட்டு அசையாமற் செய்து சாகடிக்க உதவுகிறது. சிலந்தி இனிச் செய்ய வேண்டிய தெல்லாம், மெதுவாக ஊடிழை வழியே கீழிறங்கி வந்து இரைமீது சுற்றப்பட்டுள்ள உறையுடன் அதை உண்ண வேண்டியதுதான்.

**உணவுத் திட்டம்:**

இயற்கைத் தேர்வு ஏராளமான அருங்கொடைகளைச் (Marvel) சிலந்திக்கு வழங்கியுள்ளது. மர். சான் கோசுலயன் தம் நண்பர் இருவருடன் சிலந்திப் பட்டிழையை, அதன் கட்டமைப்பு, பண்புக் கூறு ஆகியவை பற்றி மறு சீராய்வு செய்தார். "தன்னால் எவ்வளவு பெரிய இரையைப் பிடிக்க இயலுமோ அதற்கு ஏற்றபடி பெரிய வலையையே சிலந்தி அமைக்க விரும்புகிறது. பெரிய வலை பின்னச் சிலந்தி அதிகமாக உழைக்க வேண்டும். ஏனெனில் அது அதிக அளவில் புரதத்தை உண்டாக்க வேண்டும். 50இல் இருந்து 100 சதுர நூ.மா. (செ.மீ) பரப்பளவுப் பற்றுவலை ஒன்றை அமைக்க ஒரு நூறு மாத்திரி(மி.மீ)யில் 1000-இல் ஒருபங்கு (Micron) தடிப்புள்ள 75 நூறு சீறெடை (மி.கிராம்) நாரிழையை அது பயன்படுத்த வேண்டும்" என்று அவர் மதிப்பிட்டார்.

வலை அமைப்பின் நோக்கமே அதனுள் பறந்து வந்து மோதும் இரையைத் திடுமென நிறுத்திச் சிக்க வைப்பதுதான். வலை நெகிழும் தன்மை கொண்டதாய் இருத்தல் கூடாது. ஏனெனில் எகிறி விழச் செய்யும் தன்மையால் பூச்சி வலையினின்றும் வெளியே தள்ளப்படும். மேலும் வலையில் பூச்சி மோதுதலால் ஏற்படும் தாக்கம் குறைந்து அழிதல் வேண்டும். அது ஒரு மெத்தைமீது எகிறி விழும் ஆற்றலாகத் திரும்பவோ அல்லது வலையின் நாரிழையை அறுக்கவோ அல்லது முரிக்கவோ கூடாது. அந்த ஆற்றல் வெப்பமாக மாறி மறைதல் வேண்டும். சிலந்தி வலையின் அழுத்தச் சுமை அளவு, அதற்கு வன்மை மற்றும் கட்டுறுதி ஆகிய இரண்டையும் வழங்கும் அளவோடு ஒத்துப் போகிறது.

**பொருந்தும் இயக்கப் பண்புகள்:**

இங்கேயுங்கூடப் பற்றும் இழையும், கட்டமைப்பு இழையும் பெருத்த அளவில் வேறுபடுகின்றன. பற்றும் இழையில் அதன் முழு நீளத்திற்கும் ஒழுங்கான பசைத் துளிகள் மூடியுள்ளன. இயல்பியக்க (Mechanical) வகையில் பார்த்தால் பற்றும் இழை அறிவியல் வியப்புக் கொண்டது. இறுதிவரை நீளும் தன்மையும், மிகக் குறைந்த விறைப்புத் தன்மையும் கொண்ட முற்றிலும் மாறுபட்ட ஓர் இழையை உருவாக்கச் சிலந்தி 0.18 நூறு சீறெடை (மி. கிராம்) புரதத்தை உண்டாக்குகிறது. இரையைப் பிடிக்க அதற்கு இருவகைப் பண்புகள் தேவை. கடினப் பொருளைத் தன்னுள் இழுத்துக் கொள்ளும் புதைமண்ணைப் போல் (Quick Sand) ஒட்டும் பட்டிழை இயல்பாக நெகிழ்வதாலும், அதைத் தள்ளிக்கொண்டு வெளியேற அங்கே திண்மையான அமைப்பேதும் இல்லாததாலும் பூச்சி

மிகக் கடுமையாகத் தத்தளித்தபோதும், அதனால் வலையை விட்டு வெளியேற முடியாது.

**அ. கா. ஒ. வண்ணப்பட்டை (N.M.R.):**

மர். பிரிட்சு வோல்ராத்து கொலம்பியாவைச் சேர்ந்த மர். செரோமி சேண்டர்சு என்பவருடன் சேர்ந்து அணுக்கருக் காந்த ஒலியதிர்வு வண்ணப்பட்டை (Nuclear Magnetic Resonance) முறையை மேற் கொண்டு, அணுத் திரண்ம (Molecular) மட்டத்தில் பட்டிழையின் அடிப்படை வேறுபாட்டை அறிவார்ந்த முறையில் ஆய்ந்தார்.

பழுதற்ற பற்றும் இழைகளின் அ. கா. ஒ. வண்ணப்பட்டை முனைப்பான வண்ண ஒளிக் கற்றைகளைக் காட்டிற்று. அது, இழையை உருவாக்கும் புரதத்தில் அணுத் திரண்ம இயக்கம் அதிக அளவில் இருந்ததையும் காட்டிற்று. நீரை வெளியேற்ற இழையை உலர்த்தியபோது ஒளிக் கற்றைகள் மறைந்தன. இது, பற்றும் இழைக்கு இயக்கமும் நெகிழ்வும் தருவது அதிலுள்ள நீர்க்கட்டே என்பதைப் புலப்படுத்திற்று. இதற்கு மாறாகக் கட்டமைப்பு இழைகளில் அ. கா. ஒ. வண்ணப்பட்டை அவை ஈரமாயினும் அல்லது உலர்ந்தவை யாயினும் எந்த முனைப்பான ஒளிக்கற்றையையும் காட்டவில்லை.

இப்பொழுது அவர்கள் கரியத்தின் (Carbon) ஓரகத் தனிமத்துடன் செயற்கை ஊட்டமளிக்கப்பெற்ற கரியப்புரதக் காடியை (Amino Acid) அல்லது பழச் சர்க்கரையை (Glucose) ஒருசில நாட்களுக்குச் சிலந்திகளுக்குப் புகட்டி இந்த 13க ஓரகத் தனிமம் அவற்றின் இழையின் அணுத் திரண்மத்தில் ஒருங்கிணையும் வகையில் ஓர் அறிவார்ந்த ஆய்வைச் செய்தனர். 13க புகட்டுதலுக்குப் பின்னணியில் உள்ள ஒரு கருத்துதான் கரியத்தின் நடுவக் கருவை (Nucli) கட்டுப்படுத்தும் அ. கா. ஒ. செய்முறைகளில் தெளிவான அறிகுறியைப் பெற உதவுவது. செய்முறை ஆய்வில் பற்றும் இழையில் செறிவைக் காண முடிந்தாலும், கட்டமைப்பு இழையில் அப்படிப் பட்ட மேம்பாட்டைக் காணமுடியவில்லை. ஒட்டும் தன்மையுடன் பிசுபிசுப்புள்ள சில பொருள்களுடன், கரிநீரகிக் கூட்டுப் புரதங்கள் (Glyco Proteins) இருப்பதுதான், பற்றும் இழையிலிருந்து வெளிப் படும் அறிகுறிகளின் செறிவுக்குக் கரணியமாக இருக்கலாம். இப்படித் தான் கட்டமைப்பு இழை கரிநீரகிக் கூட்டுப் புரதங்களோடு அதிகமாக நீளக்கூடியதாயும் வளப்பமாயும் உள்ளது.

**பசைத் துளிகளின் பங்கு:**

கரிநீரகிக் கூட்டுப் புரதம் எங்கிருந்து வந்தது? பற்றும் இழைக்கு அழகூட்டும் பசைத் துளிகளில் இருந்து உண்டானதா? அல்லது பற்றும் இழையின் உள்ளியல்பால் (Intrinsic) உண்டானதா? பசைத் துளிகள் இன்றியமையா வேலைகளைச் செய்கின்றன என்பதை அவற்றின் ஆக்கக் கூறுகளை ஆய்வு செய்து மர். பிரிட்சு வோல்ராத்து குறிப்பிட்டுக்

காட்டினார். ஆவியழுத்தம், நீர்க்கூட்டு ஆகியவை தொடர்ந்து நிலவுவதற்கு வாய்ப்பாகப் பசையாகச் செயற்படும் கரிநீரகிக் கூட்டுப் புரதங்களுடன் கூட நான்மடிக் கரிய வெடியம் (Choline) நான்மடிக் கரிவெடிய உயிரகக்காடி ((Betaine) [காபாமைடு–Gabamide] மற்றும் இவையொத்தக் கூட்டுப் பொருள்கள் ஆகியவை அவற்றில் செறிந்திருப்பதாகப் புலப்படுகிறது. இந்தத் துளிகள் பற்றும் இழையைக் குழைமமிட்டு (Plasticising) ஒட்டுகின்றன. இழையை அசையவும், தொய்யவும் விடுகின்றன. ஒரு தொய்வக் கட்டிழையை (Rubber Band) போன்று இயல்பான நீளத்திலிருந்து ஐந்து மடங்குக்கு அதை நீட்டிக்கின்றன.

இந்தத் துளிகள் வலையின் மேற்பரப்பு ஆற்றலால் சின்னஞ் சிறிய திருகு உருளைகள் (Winches) போல் அல்லது சுழல் அச்சு மூலம் பாரந்தூக்கிகள் (Wind Lasses) போல் இயங்குவது மேலும் வியப்பைத் தருகிறது. காற்றாடி பறக்கவிடும் போட்டிகளில் நூல் சுற்றப் பயன்படும் திருகு உருளையை அல்லது கப்பியை (Pulley) ஒத்து இழைச் சுருக்கத்தின்போது வலை அறாமல் தடுக்கவும், மிகைப்படும் பட்டு இழைகளைத் திரட்டவும் இந்த இயக்கம் உதவுகிறது. பசைப்பொருள் கரைசல் செப்பமாக இருப்பதால், அது இழையின் ஈரம் ஆவியாவதைத் தடுக்கிறது. மற்றும், நாரிழைகளோடு எதிர்வினை (Interact) புரியாமல் இருப்பதால் பாரந்தூக்கியாகச் செயற்படுகின்றது.

பற்றுவலைப் பட்டின் அணுத் திரண்ம இயக்கத்தால் அதன் இழை தொய்வுத் தன்மை பெறுகிறது. புதிர்க் கதிர்ப் படப்பகுப்பு ஆய்வில் அது ஒரு வகையில் விரைப்புப் பொருள்களால் அமைந்து, தட்டைக் கற்கள் பதித்த கழுத்தணி (Flat Necklace) போலவும், தொய்வ (Rubber) வலைப் பின்னல்போல் இயங்கும் இணைப்பு இழை போலவும் தெரிகிறது.

நாரிழையில் நீர்க்கூறு அகற்றப்படும்பொழுது அது விறைப்பாக வும் (Rigid) முரடாகவும் (Stiff) ஆகிறது; நீர்க்கூறும் குழைமப் பூச்சும் இருக்கும்போது அது தொய்யவும், நீளவும் செய்கிறது. இந்த இயக்கத்தை அதனோடு தொடர்புடைய பசைத் துளிகள் உறுதி செய்கின்றன.

வலைமீது பனித்துளிகள் படியும்போதும், காற்றில் ஈரத்தன்மை (Humidity) இருக்கும்போதும் ஏன் சிலந்திகள் தங்கள் வலையை அமைக்கின்றன என்பதற்கு இது ஒரு கரணியமாக இருக்கலாம். காற்றில் அதிக ஈரப்பதம் இருக்கும்போது வலையை அமைப்பதால் பற்றும் இழை மிக விரைவில் ஒட்டும் தன்மை கொள்கிறது. அன்றாடம் காலை நேரத்தில் பற்றும் இழைகளை உண்ணும் இந்தச் சிலந்திகளின் புதிரான (Mysterious) இயல்பு இதனால் மேலும் தெளிவாகிறது. அதுதான் சிலந்திகள் காற்றிலிருந்து அதிக நீரைப் பெறும் நேரமாகும். சிலந்தி பற்றும் இழையை உண்பதால் அது தண்ணீரைக் குடித்துத் தன் அன்றாட நீரிழைப்பை ஈடுசெய்து கொள்கிறது.

– நன்றி : **'இந்து'** 14.4.93

ஊர்திகளில் – தமிழில் பதிவு எண்கள்

# செய்ததும், செய்ய வேண்டியதும்.

'அரசன் எவ்வழி அவ்வழிக் குடிகள்' — என்கிற ஆளுமைக்கான சிந்தனைகள் கலைந்து, குடிகள் எவ்வழி அவ்வழி அரசு என்கிற போக்கு வந்துகொண்டிருக்கிறது.

மக்கள் நலம் என்பதைப்பற்றி அரசுகள் எப்போதும் கவலைப் பட்டதில்லை. மக்களைத் தமக்கானவர்களாக வைத்திருப்பது எவ்வாறு என்பதே இன்றைய சட்டமன்ற, பாராளுமன்றங்களில் நுழைகிற கட்சிகளின் எண்ணமாகி அதற்கெனவே சட்டதிட்டங்களை வகுத்துக் கொள்ளுகின்றன.

மக்களின் கோரிக்கை இல்லாமல், போராட்டமில்லாமல், ஆர்ப் பாட்டங்கள் இல்லாமல் மக்களுக்கான எவ்வகை மாற்றங்களையும் அரசுகள் செய்துவிடுவதில்லை. முதலாளியர்களின் நலன்களைக் கருத்தில் கொண்டும், அதற்குகந்த நிலையில் மக்களை ஈடுபடுத்துவது எவ்வாறு என்னும் நோக்கிலுமே அரசு தன் செயல்களைச் செய்கின்றது.

அரசும், ஆளுமையரும் நடத்துகிற விழாக்களும், விளையாட்டுக ளும் மக்களின் போராட்ட நோக்கங்களைச் சிதைப்பதற்கானவை யாகவே உள்ளன.

இதன் அடிப்படையில் அண்மையில் தமிழ்ப் பண்பாட்டுத் துறை அமைச்சர் முனைவர் மு. தமிழ்க்குடிமகன் அவர்கள் ஊர்திக ளில் — தமிழில் பதிவு எண்களைப் பொருத்திக் கொள்ளலாம் என்று ஆணை ஒன்றைப் போட்டிருக்கிறார்கள்.

இதுவரை அவ்வாறு அல்லாமல் தமிழகத்தில் ஓடும் ஊர்திகளில் ஆங்கிலத்திலேயே பதிவு எண்பலகை வைத்திருக்கிற நடைமுறைக்கு மாற்றாய்த் தமிழிலும் எழுதலாம் என ஆணைப் பிறப்பித்துள்ளதை மிகவும் வரவேற்கிறோம்.

இவ் ஆணைகூட ஏதோ திடுமெனப் பிறப்பிக்கப்பட்டுவிட வில்லை. தூயதமிழ் இயக்கங்களின், தமிழ் அமைப்புகளின் தொடர்ந்த கடும் கருத்தறிவிப்புகளாலும் போராட்டங்களாலுமே போடப்பெற்றுள்ளது.

இருப்பினும், தூயதமிழியக்கப் பின்னணியில் வளர்ந்த அமைச்சர் அவர்களின் இச்செயலுக்கு மிகவும் மகிழ்ச்சியையும், நன்றியையும் தெரிவிப்பது தமிழ்உணர்வினர் அனைவரின் கடமை யும் ஆகும்.

அதேபோது, அரசும், தமிழ் இயக்கங்களும் செய்யவேண்டிய கடமைகளாகச் சிலவற்றைச் சொல்லுவது தேவையானது.

* இப்போது மாற்றப்பட்டுள்ளவை எழுத்துகள் மட்டுமே ஆகும். எண்கள் உலக எண்களாகவே இருக்கும் என்று அமைச்சர் கூறியிருக்கிறார். அவ் எண்களும் தமிழிலிருந்து திரிந்தவையே — என்கிற உண்மையை அமைச்சர் சுட்டியிருக்கலாம். மேலும் வடநாடுகளில் இந்தியிலும்; கருநாடகாவில் கன்னடத்திலுமே எண்களும் பதிப்பிக்கப்பட்டிருக்கையில் நாமும் தமிழில் எண்களைப் பதிப்பதில் எந்தத் தடையும் இல்லை.
* அரசின் இவ் ஆணைக்கு இணங்க முதற்கட்டமாக அரசின் அனைத்து ஊர்திகளிலும் பதிவு எண் பலகை தமிழில் மாற்றப் படுதல் வேண்டும்.
* மேலும் நகர், புறநகர் பேருந்துகளின் தடஎண்கள் இன்றைக்கு 1, 1A, PP1A, 1B, 1C — என்றே ஆங்கிலத்தில் உள்ளன. அரசு வண்டிகளின் தட எண்களையே இவ்வாறு ஆங்கிலத்தில் வைத்துக்கொண்டு—தனியார் ஊர்திகளின் பதிவு எண்களைத் தமிழில் வைத்துக்கொள்ளலாம் என்பது நகைப்புக்குரிய தாகவே ஆகிவிடும்.
* மேலும் ஒலிப்பு முறையில் வேறுபாடு குறைந்த ல,ள; ர,ற – எழுத்துகளுக்குப் பகரமாக வேறு எழுத்துகளை அரசு அறிமுகப் படுத்துவது நல்லது. இல்லையெனில் அதன்மூலம் வருகிற சிறுசிறு தவறுகள்கூடப் பெரியஅளவுத் தொல்லையானது என்பதாக எதிர்நிலைப் போக்காளர்களால் மறுக்கப்படும்.

— இம் மேற்சொன்ன செய்திகளை அரசு கவனத்தில் எடுத்துக் கொள்ளவேண்டும் என்கிற அதேபோது — தமிழ் இயக்கங்களும் சிலவற்றில் கவனம் செலுத்துதல்வேண்டும்.

இன்றைக்கு அரசு ‘தமிழிலும் எழுதலாம்’ — என்று சொல்லுகிற அளவிலேயே நம்முடைய தேவை முழக்கங்களின் குரல் மெல்லிய தாய் இருக்கிறது என்பதை நாம் உணர்தல் வேண்டும்.

கருநாடகாவில் இருக்கிற தேசியப்பற்று இங்குத் திடுமெனக் குதித்திடாது. மாறாய் அதற்கான செய்திகளை மக்களிடையே எடுத்துச் செல்வதில் நாம் செய்கிற கடும் முயற்சியே இவ்வகை மாற்றங்களைச் செய்விக்கும்.

எனவே ‘தமிழில் மட்டுமே எழுதவேண்டும்’ — என்றோ, ‘தமிழில் எழுதினால்தான் பதிவு இசைவு தருவோம்’ என்றோ அரசு ஆணைபோடுவது என்பது நம் போராட்டங்களாலும், நம் மக்களிடையே நாம் பரப்புகிற முயற்சியாலுமே நடைபெறும்!

— **விணைஞன்**

# தென்மொழியின் தொண்டில் பொதுமையியல்

(பாவலரேறு ஐயா அவர்களின் மூன்றாம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்ச்சிக் கருத்தரங்கத்தில் படிக்க வேண்டி எழுதியனுப்பிய உரை.)

இரணியன்

தென்மொழியின் தோற்றம், வளர்ச்சி, பரவல், தொண்டு முதலியவற்றை இந்தியத்துணைக்கண்டத்து மூவாயிரம் ஆண்டுக் கால வரலாற்றுப் பின்புலத்துடனேயே நாம் நோக்க வேண்டியவர்களாய் உள்ளோம்.

இந்தியத் துணைக்கண்டம் முழுமையும், தமிழர் தாயகமாக விளங்கியது என்பது அசைக்க இயலாத வரலாற்று உண்மை!

குமரிப் பெருநிலத்தின் தொன்முதுகுடிகள் பரவி வாழ்ந்த நாவலந் தேயத்தின்மீது, ஆரிய இனக்குழுக்கள் பன்முறை பெரும் படையெடுப்புகளை நடத்தின. மண்ணின் மாந்தரும், கறுப்பினத்தவரும், நாகரிக வாழ்வில் மேலோங்கி இருந்தவர்களும் ஆகிய தமிழர், படையெடுப்பாளர்களை அலறத்தாக்கி அடித்துத் துவைத்தனர். தமிழர் வெற்றியும் பெற்றனர்; தோல்வியும் உற்றனர். தமிழரை எதிர்கொண்ட ஆரியப் படையெடுப்பாளர்களின் அழுகையும் புலம்பலும் சூழ்ச்சியும் சழக்குகளுமே இன்று 'வேதங்கள்' என விரித்துவைக்கப்பட்டுள்ளன.

கால ஓட்டத்தில் வெள்ளை ஆரியச் சூழ்ச்சிகளின் முன், கறுப்புத் தமிழரின் வீரம் வென்று நிற்கவில்லை. விளைவு – குமுக வாழ்வில் ஆரியரின் ஊடுருவல்!

தம் இருப்பைத் தக்கவைத்துக்கொள்ள முனைந்த ஆரியர்கள் தமிழருள் ஆளும் வகுப்பினரை வசப்படுத்தினார்கள். கதைகளை – தொன்மங்களை இட்டுக்கட்டினார்கள்! தமக்கேற்ற அரசியலை, பொருளியலை உருச்சமைத்தார்கள்! சட்டங்களை உருவாக்கி நடைமுறைப்படுத்தினார்கள்.

ஆரியர் சட்ட நெறிமுறைகளின்படி, உழவர்கள், உழைப் பாளர்கள், படைவீரர்கள், கைவினைஞர்கள் யாவரும் இழிமக்கள் ஆயினர்! இப் பெரும்பான்மை மண்ணின் மக்களும் ஒன்றுகூடி உறவாடமுடியாதபடி பிளவு செய்யப்பட்டனர்! வேற்றுமைப் படுத்தப்பட்டனர்.

மாமன்னர்களையும், வேளிர்களையும் ஆரியர்கள் தம் காலடியில் அமர்த்தினார்கள்! தம் ஏவலர்களாய் உருத்திரித்தார்கள்.

ஆரிய நச்சுக்கோலால் மக்கட் குமுகம் பார்வை பிறழ்ந்து, உரம் குலைந்து குற்றுயிரானது!

இந்நிலையில், ஆரிய கொடிய பழக்கவழக்கங்களுக்கு எதிராக வட புலத்தில் சமணமும் புத்தமும் முகிழ்த்தன! தெற்கே வள்ளுவமும் சித்தமும் எழுந்தன!

ஏற்றத்தாழ்வுக்கும் ஒப்புரவுக்கும் இடையிலான போராட்டமாக, சாதியத்திற்கும் சமன்மைக்கும் இடையிலான போராட்டமாக, மனுவுக்கும் வள்ளுவத்திற்கும் இடையிலான போராட்டமாக, சடங்காளர் (புரோகித) கூட்டத்திற்கும் பாட்டாளியர்க்கும் இடையிலான போராட்டமாக, சமற்கிருதத்திற்கும் தமிழுக்கும் இடையிலான போராட்டமாக ஆரியர் தமிழர் போராட்டம் நீண்டது.

இந்நிலையில் ஐரோப்பியர் வருகையால், குமுக அமைப்பில் பல்வேறு மாற்றங்கள் ஏற்பட்டன! வரலாற்றுப் பார்வை துலக்கமுற்றது! தமிழின வரலாறு வெளிச்சத்திற்கு வந்தது! தமிழராய் வாழ்பவரும், வாழ்ந்தவரும் ஆகிய தொன்முதுகுடிகள், தம் வீழ்ச்சியின் காரணத்தைக் கண்டுகொண்டனர்! தாம் அடிபட்ட அவலங்களை உணர்ந்தனர்! தம் அடிமை வாழ்வை – அவல வாழ்வை உதறி, தமக்குரிய அதிகாரங்களை ஏந்தி, முழுமை மாந்தராய் எழுந்துநிற்க முனைந்தனர்.

இந்த முயற்சியின் வெளிப்பாடுதான் இங்கே தோன்றிய பார்ப்பனரல்லாதோர் இயக்கங்கள், ஒடுக்கப்பட்டோர் இயக்கங்கள், திராவிட இயக்கங்கள், தனித்தமிழ் இயக்கங்கள், ஆரியப் பிடியை எதிர்த்துப் போரிட்ட சிவ, மாலிய இயக்கங்கள் எல்லாம்!

இவையாவும் ஒரே முழுமையின் பகுதிகளாகவே தோன்றியவை எனலாம்.

இவற்றின் பொதுப்பண்புகள் ஆரிய மொழி – ஆரியப் பழக்க வழக்க எதிர்ப்பு, குமுகச் சமன்மை, உழவர் உழைப்போர் உயர்வு, தாய்மொழி பேணல், மடமை எண்ணங்கள், நடைமுறைகள் களைதல் என்பன ஆகும்.

இக் கருத்தியல்களுடன்தான் திராவிட இயக்கம் இம்மண்ணில் முகிழ்த்தது என்பதனை நாம் நினைவிற்கொள்ள வேண்டும். 'திராவிடம்' என்னும் சொல்லாட்சியும், தமிழியக் கூறுகளை மட்டுமே சுட்டியதையும், சிதைவிடத்தும், இக்கூறுகளுக்கே உயிர்கொடுக்க முனைந்ததையும் நாம் கூர்ந்து நோக்க வேண்டும்.

மூவாயிரம் ஆண்டுக்கு முற்பட்ட ஆரியப் படையெடுப்பு,

முனைந்து சிதைத்தது இப்பெருநிலத்தின் தொன்முதுமொழியை! அம் மொழியின், மொழியினத்தின் வரலாற்றை! பண்பாட்டை!

எனவே, அம்மொழியை, அதன் வரலாற்றை, அதன் இனத்தின் விழுமியங்களை மீண்டும் எடுத்து நிறுத்திப் பொலிவூட்டும் இயக்க முனைவர்களாய் முன்வந்தவர்கள் பரிதிமாற்கலைஞர், பி.டி. சீனிவாச(அய்யங்கா)ர், மறைமலை அடிகளார், நாவலர் பாரதியார், தஞ்சை ஆபிரகாம் பண்டிதர், மொழிஞாயிறு தேவநேயப் பாவாணர், புரட்சிப் பாவேந்தர் பாரதிதாசன், பாவலரேறு பெருஞ்சித்திரனார் முதலியோராவர்.

இவர்களுள் முன்னோர் அனைவரும் அறிவாளரிடையே அறிவுழைப்புடன் நின்றவர்களேயாவர்! ஆனால், பாவலரேறு அவர்களோ, மொழி மீட்சிப் பணியைப் பெருந்திரள் இயக்கமாகவே மாற்றியமைத்தார். அவ்வாறு மொழிமீட்சியில் இறங்கிய போது, அப்பணி, உழைக்கும் மாந்தரின் உரிமை மீட்சியாகவும் மண்ணின் மைந்தரின் உடைமை மீட்சியாகவும், சாதி, பழக்கவழக்க விலங்குகளின் தகர்ப்பாகவும் விரிவதைக் கண்டார்.

எனவே, சாதியத் தகர்ப்பு, ஆரியர் பழக்கவழக்கக் கொடுநெறித் தகர்ப்பு என்பனவற்றில் முழுவீச்சில் இறங்கினார். உழைப்பாளர் படும் அவலங்க்ள், உழுவோர் படும் துயரங்கள், அவர்கள் எய்த வேண்டிய உரிமைகள், மீட்க வேண்டிய உடைமைகள் பற்றி யெல்லாம் ஆழச்சிந்தித்தார். எனவே மக்கள் விடுதலையும் மண்ணின் விடுதலையும் ஒக்கக் கருதி உழைப்பவர் ஆனார்.

தம் சிந்தனைத் தொண்டின் களங்களாக, தென்மொழி, தமிழ் நிலம், தமிழ்ச்சிட்டு ஆகியவற்றைப் படைத்தார். இக்களங்களே, தமிழ் மண்ணில் பல்வேறு களங்கள் உருவாவதற்குக் காரணமாயின.

இன்று இருக்கக்கூடிய அதிகார அமைப்பு என்பது, அடிப் படையில் எந்த மாற்றத்தையும் செய்யவல்லது அன்று என்பதைத் தென்மொழி மூலம் எடுத்துரைத்தார். ‘பாராளுமன்றம் பன்றித் தொழுவம்’ என்று மாவோ கூறினார். இந்தப் பாராளுமன்ற முறை எத்தகையது என்பதைத் தென்மொழியில் (சூன் 1971) பாவலரேறு விளக்குகிறார்.

> *“என்றும் போல் தேர்தல்வரும்; முடிவுவரும்;*
> *ஆங்காங்கே, போட்டியிட்டே*
> *ஆர்ப்பரிப்பார் பலருக்குள்ளும்,*
> *என்றும் போல் ஒவ்வொருவர்*
> *தேர்ந்தெடுக்கப் பெறுவார்கள்!*

*அமைச்சரவை அமைப்பார்கள்;*
*அமருவார்கள்!*
*என்றும் போல், தருக்கம் வரும்;*
*சட்டம் வரும்; திட்டம் வரும்;*
*செய்தி வரும்; எல்லாமும்*
*வரும்!—ஆனாலும்,*
*என்றும் போல் ஏழையரின்—உழைப்பவரின்—*
*நிலைமட்டும் இருந்தபடி யிருந்துவரும்!*
*எண்ணிப் பார்ப்பீர்!"*

இப் போலியான மக்கள் நாயக ஆட்சியில் குமுகாயம் எப்படிச் சீரழிந்து கிடக்கிறது என்பதைத் துன்பம் மேலோங்கச் சுட்டிக்காட்டுகிறார்:

*"நட்ட நடுத்தெருவில் — தம்பி*
*நால்வர் நடக்கையிலே — நல்ல*
*வெட்ட வெளிச்சத்திலே — பெரும்*
*வீரர் எதிரினிலே — கடை*
*கெட்ட இழிசெயல்கள் — கொடுங்*
*கீழ்மை இருள்வினைகள் — பழி*
*சொட்ட நடக்குதடா — வெளிச்*
*சொல்ல முடிவதில்லை — பார்*
*நட்ட நடுத்தெருவில்"*

மக்கட் பகைவர்கள், அழிம்பர்களால் குமுகம் பந்தாடப் படுவதைக் கூர்ந்து நோக்கிக் குமுறும் பாவலரேறு செல்வவான்களிடம் சாற்றுகிறார்:

*"ஓங்கிக் கட்டிய உயர்ந்த மாளிகை!*
*உலாவக் கட்டிய மேற்புற மாடிகள்!*
*தூங்கக் கட்டிய தனிநிலை அறைகள்!*
*தொங்கு மாடங்கள்! ஊஞ்சல் தூலிகை!*
*தாங்கிய விளக்குகள்! பலகணித் திரைகள்!*
*தரையெலாம் விரிப்புகள்! பலவண்ண ஓவியம்!*
*பாங்காய் இவற்றுளே குபுகுபு குபுவெனப்*
*பாட்டாளி மக்கள் புகுகின்றார் பாருங்கள்!*
*ஓங்கிய செல்வரே! உணருங்கள். அப்படி*
*ஒருநாள் வரத்தான் போகிறது! — இவ்*
*வுலகம் பொதுவென ஆகிறது!"*

இது நடக்கும் என்பது தென்மொழிப் புலத்தின் உறுதியான நம்பிக்கை. ஆனால் வழிமுறை எது?

*"சட்டங்கள் தீட்டினோம்! திட்டங்கள் காட்டினோம்!*
*சரிசமம் எனும்நிலை வாய்ந்ததா? — பழஞ்*
*சாத்திரச் சகதியும் காய்ந்ததா? — பணக்*
*கொட்டங்கள் எத்தனை? கொள்கைகள் எத்தனை?*
*கூச்சலிட்டோம் பயன் இல்லையே! — ஒரு*
*கொடிய புரட்சிதான் எல்லையே!"*

புரட்சியாளன் மாற்றுப்பட்டறிவுகள் மூலம் புரட்சியை முன்னெடுப் பவனாகத் திகழவேண்டும். இல்லையெனில் அவன் குறுகிப்போக நேரும். முற்காணியாய் நின்று இவ்வுண்மையை விளக்குகிறார் பாவலரேறு.

*"சென்ற தடத்திலேயே சென்றுகொண் டிராதே!*
*சேற்றில் சகதியினில் நடந்துபார்! — முள்*
*சிரிக்கும் கரும்புதருள் நுழைந்துபார்! — பெருஞ்*
*சிறப்புண்டு; இழிவுண்டு; சிதைவுண்டு; புதைவுண்டு!*
*சிரித்தும் அழுதும் உயிர் தேம்புவாய் — "துயர்*
***சுவைத்து"இவ் வுலகநலம் ஓம்புவாய்!"***

பாவலரேறு அவர்களின் இச் செய்யுள், மாசேதுங்கின் செய்யுள் ஒன்றுடன் ஒப்பிட்டு நோக்கத்தக்கது.

*"ஆடவைத் திங்களில் வான்புகழ்ப் படையினர்*
*கொடியவர் தீயவர் கொட்டம் ஒடுக்கினர்!*
*மிகப்பெரும் பறவையை, கொடுந்திமிங் கிலத்தைக்*
*காதமா நீளக் கயிற்றால் கட்டினர்....*
*நம்முடை தலைக்குமேல் பாறைகள் தொங்கிட*
*நடந்திட லாகிறோம் துணிவுமிக் கூரவே"*

பாவலரேறு கூறும் சேறும், சகதியும், புதரும், சிதைவும், புதைவும் மாவோ கூறும் பெரும்பறவை, திமிங்கிலம், பாறைகள் என்பவற்றுடன் ஒப்புநோக்கத் தக்கவை. தடைகள், துன்ப துயரங்கள், இழப்புகளைத் தாண்டிச் சூழலுக்குத் தகப் பாதைகளை மாற்றி இலக்கை அடைவதில் பாவலரேறு காட்டும் ஈடுபாடும் கவனமும் நம்மை வியப்புற வைப்பவை.

தென்மொழி, தமிழை உயர்தனிச் செம்மொழி என எண்பித்தது; அதன் தூய இயக்கத்தை, தொன்மையை, வண்மையை, வியன் மையை உலகிற்குப் பறைசாற்றியது! 'மண்ணுரிமை இல்லையேல் இல்லை பெருமக்கள் வாழ்வுநிலை மாற்றும்ஒரு போர்' என்னும் உண்மையைத் தமிழர்க்கு உரக்கக் கூறியது!

திரவிட இயக்கங்களால் ஏமாற்றப்பட்ட இளைஞர்கள், உண்மைத் தமிழ் நெஞ்சினர் தென்மொழியை நோக்கி வந்தார்கள்.

ஆழ்ந்த பொதுமை ஈடுபாடும், குமுகப் புரட்சி வேட்கையும் கொண்ட இளைஞர்கள், இந்தியப் பொதுவுடைமை இயக்கங்களிடத்து நம்பிக்கை இழந்தபோது, தென்மொழிப் புலத்தில் ஒருவரையொருவர் சந்தித்துக்கொண்டார்கள். நம் நிலம் தமிழ்நிலம் என்னும் தெளிவும், நாம் பொதுமையினைப் பயிர் செய்யவேண்டிய நிலம் தமிழ்நிலமே என்றும் அவர்கள் தெளிவுபெற்றார்கள். அப்போது 'தென்மொழி', 'தமிழியப் பொதுமைக்'கு உரம் ஆனது.

எழுபதுகளின் தொடக்கத்திலேயே தமிழ்த் தேசியப் பொதுமையருக்கான களத்தைத் தென்மொழி உருவாக்கித் தந்தது. மொழியுணர்வு என்பது பொதுமை உணர்வுக்குப் பகையானது எனப் பேசிவந்த இந்தியப் பொதுமையருக்கு, தென்மொழி அரங்கில் நின்று தமிழ்த் தேசியப் பொதுமையர் விடைகூறத் தொடங்கினர். தனித்தமிழ், பகுத்தறிவு, பொதுவுடைமை என்னும் முந்நோக்குடன் 'தமிழியக்கம்' ஒன்று தோன்றுவதற்கும் தென்மொழியே காரணம் ஆனது.

தஞ்சை, கோவை, வெங்காலூர், பரமக்குடி முதலிய பகுதிகளில், தென்மொழித் தோழர்கள், தெளிந்த தமிழ்த் தேசிய உணர்வு கொண்ட பொதுமையாளர்களாய், மக்கள் மன்றில் செயலாற்றத் தொடங் கினார்கள்.

1973-க்குப் பின் வெளியான 'மனிதன்' ஏட்டில் தென்மொழித் தோழர்களின் எழுத்துகள் வெளிவரத் தொடங்கின. பொதுமைப் புரட்சிக்கான கலை வடிவங்களையும் பல்வேறு பகுதிகளில் 1977-க்குப் பின் தென்மொழித் தோழர்கள் கைக்கொண்டார்கள். தென்மொழிப் புலத்தின் மிகச் சிறந்த விளைவிப்பாக, குணாவின் 'மார்க்சிய இயங்கியல்' தூய தமிழில் வெளிவந்தது.

அறைகூவல், குமரி, பரிமாணம், தமிழியக்கம், துளிகள் போன்ற பொதுமை ஏடுகளில் தென்மொழியின் துலக்கத்தைக் காண முடிந்தது.

1983-இல் இலங்கை வெளிக்கடைச் சிறையில் தமிழ் மக்களும், ஈழப் போராளிகளும் சிங்களக் காடையரால் படுகொலை செய்யப் பட்டபோது, தமிழகத்தில் இந்தியப் பொதுவுடைமை 'ஆய்வு உலை'யில் ஏற்றப்பட்டது. இந்தியப் பொதுவுடைமை அமைப்புகளிலிருந்து, ஆயிரக்கணக்கான இளைஞர்கள் வெளியேறி, தமிழ்த் தேசியப் பொதுமை அமைப்புகளை உருவாக்கினார்கள். தென்மொழியை ஏளனத்தோடு பார்த்தவர்களும், பொருள் துணிவோடு பார்க்கவேண்டிய சூழல் உருவானது.

தமிழனின் நெஞ்சாங்குலையாய், தமிழினத்தின் முதுகந்தண்டாய் அமைந்த தென்மொழியின் பரிமாணங்களுள், 'பொதுமையியல்' முகாமையானது.

இதனை விரிவான ஆய்வுக்கு உட்படுத்துவது மிகவும் தேவையாகும்.

*1969 மார்ச்சு, ஏப்பிரல் தென்மொழி இதழில், சுவடி 7, ஓலை 2-இல் 'பொதுமை உணர்வு' எனப் பாவலரேறு எழுதிய கட்டுரையின் ஒருபகுதியை முடிப்புரையாகத் தருகிறேன்:*

"பொதுவுடைமை உணர்வு மேனாடுகளினின்றும் இறக்குமதி செய்யப்பட்டதுபோல் பாராட்டியுரைக்கப் பெறுகின்றது.

பிறருக்கு இது புதிய கொள்கை ஆகலாம்.
தமிழர்க்குப் பொதுமை உணர்வு மிகப் பழையது!
மிகமிகப் பழையது!

உலகிற்கே பொதுமை உணர்வு பயிற்றிய தமிழன் இன்று தனிமை உணர்வால், தன்னல உணர்வால் தகவிழந்து தறிகெட்டுச் சாய்கிறான்.

தமிழன் காசுக்கு அடிமையானான்! கருத்துக்கு அடிமை யானான்! சோற்றுக்கு அடிமையானான்!

காரணங்கள் எவை?

**தமிழன் பொதுமை உணர்விழந்தான்!** தனிமை கருதினான்! தன்னலம் பற்றினான்! தன்னை அடிமை ஆக்கிக்கொண்டான்! தன்னுணர்வி ழந்தான்! தன் இனம் மறந்தான்! தன்மொழி மறந்தான்! இவனைத் தூக்கி நிறுத்த ஒல்லுமோ? காலமே நீ விடை சொல்!" ■

## திருக்குற்றாலச் சாரல்விழாவில் 'ஐயை' வில்லிசை

திருக்குற்றாலத்தில், தி.பி. 2029 கடகம் 15 வெள்ளி (31.7.98) அன்று, தமிழ்நாட்டரசின் சார்பில், நெல்லை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. கி. தனவேல் அவர்கள் தலைமையில் நடைபெற்ற சாரல் விழாவில், 'ஐயை' வில்லிசை நிகழ்ச்சி இடம்பெற்றது. பாவலரேறு ஐயா அவர்களின் இலக்கியப் படைப்பான ஐயையை நெல்லை திரு. அதியமான் – திரு திரவியத்தம்மாள் இலக்கிய வில்லிசைக் குழுவினர் வில்லிசை வடிவில் அமைத்து நிகழ்ச்சியை நடத்தினர். அரசு அதிகாரிகள் பலரும் பங்கேற்ற இவ்விழாவில் பொதுமக்கள் திரளாகக் கலந்துகொண்டு வில்லிசையைச் சுவைத்து மகிழ்ந்தனர்.

## சிறுமைப்படுத்தப்படும் சித்த மருத்துவம்.

ஐயா,

சில மாதங்களுக்கு முன், "பல நிபுணர்கள் பக்கத்தில் இருக்க, பாட்டி வைத்தியம் ஏன்?" என்று தமிழ் நாளிதழ்களில் கண் பாதுகாப்புத் தொடர்பான அரசின் நலத்துறை விளம்பரம் ஒன்று பண்டைத் தமிழ் மருத்துவத்தை இழிவு செய்தது.

பாட்டி மருத்துவம் மட்டுமன்று; படித்துப் பட்டம் பெற்ற சித்த மருத்துவமும் தமிழக அரசில் சிறுமைப்படுத்தப்பட்டே வருகிறது. தமிழகத்தின் சித்த மருத்துவக் கல்லூரியின் இருப்பிடமான பாளையங்கோட்டையில் உள்ள நடுவண் சிறையில் அண்மைக் காலம்வரை சித்த மருத்துவத்திற்கு வாய்ப்பின்றி இருந்தது. நோயாளி கள் ஓரிருவர் மட்டும் ஏதாவது ஒரு காரிக்கிழமையில், வழிக்காவலர் வந்தால் மட்டும் பாளையங்கோட்டைச் சித்த மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்குச் சென்று வருவர். இதனால் தொடர்ந்து மருத்துவம் செய்து கொள்ள இயலாத நிலை இருந்தது.

அண்மையில், ஒவ்வொரு காரியன்றும் சித்த மருத்துவர் ஒருவர் சிறைக்குள் சென்று மருத்துவம் பார்க்கும் நிலை ஏற்பட்டுள்ளது. இது மகிழ்ச்சி அளிக்கக் கூடிய ஒன்றே. ஆனால் பட்டம் பெற்ற அம் மருத்துவரும் மருந்தும் புறக்கணிக்கப்படுவதை எண்ணும்போது நாம் தமிழ்நாட்டில்தான் இருக்கிறோமா என்ற எண்ணம் எழுகிறது.

இங்குள்ள சிறை மருத்துவமனையில் சித்த மருத்துவர் இருக்கும் பொழுது ஆங்கில மருத்துவர் உள்ளே செல்வதில்லை. ஆங்கில மருத்துவர் வந்து வெளியே இருக்கிறார் என்ற செய்தி அறிந்ததும் சித்த மருத்துவர் விரைவாகப் பணிகளை முடித்துவிட்டு வெளியேறி விடவேண்டும். இதனால் சித்த மருத்துவர் காலை எட்டுமணிக்கே சென்று நோயாளிகளைப் பார்க்கிறார். பார்த்தபின் அவர் எழுதித் தரும் மருந்துகளைப் பாளைச் சித்த மருத்துவக் கல்லூரி மருத்துவமனையிலிருந்து சிறைக்கு வாங்கிச் செல்வார்கள். அம் மருந்துகள் சிறை மருத்துவமனைக்குள் நுழையவும் கூடாது என்றும் மருத்துவ மனை ஊழியர்களோ மருந்தாளுநர்களோ அம் மருந்துகளை நோயாளிகளுக்குத் தருவதில் உதவி செய்யக்கூடாதென்றும், ஆங்கில மருத்துவர் ஆணை யிட்டிருப்பதாகக் கூறப்படுகிறது. இதனால் சித்த மருந்துகள் சிறையிலுள்ள கோபுரப் பகுதியில் வைத்துச் சிறை அலுவலர்களாலேயே வழங்கப்படுகின்றன.

அதுமட்டுமன்று, மருந்தை உட்கொள்ளத் தேனைப் பயன் படுத்துமாறு மருத்துவர் அறிவுரை கூறுகிறார். எனவே, கடந்த 23-7-98 அன்று வழக்குமன்றம் சென்று திரும்பும்போது தமிழ். முகிலன் என்ற சிறையாளி தேன், கருணை இளகம் ஆகியவற்றை வாங்கிச் சென்றார். அவர் வாங்கி சென்றவற்றில் பிற பொருள்களை உள்ளே எடுத்துச்செல்ல இசைந்த அன்றைய தலைவாயிற் (Main Gate) பொறுப்பாளர் இவ்விரண்டையும் சிறை அலுவலரைக் கேட்டுத் தருவதாகக் கூறியிருக்கிறார். அவ்வாறு அவை அச்சிறையாளிக்கு வழங்கப் பெறவே இல்லை. தமிழ் நாட்டில் தமிழ் மருத்துவத்திற்குத் தடை. இந்நிலை கண்டு நம் தமிழர் பொங்கும் நாள் எந்நாளோ?

— **தமிழ்மணி,** திண்டிவனம்.

# செய்திகள்

## தமிழர் தொழில் - வணிகப் பாதுகாப்பு மாநாடு:

தமிழர் தொழில் – வணிகப் பாதுகாப்பு மாநாடு தி.பி. 2029 ஆடவை 27 காரி (11.7.98) அன்று, சென்னை – தியாகராயர் நகரி லுள்ள செருமன் அரங்கத்தில் நடைபெற்றது. தமிழ்த் தேசப் பொதுவுடைமைக் கட்சியின் சார்பில் நடைபெற்ற இம்மாநாடு அன்று காலை 10 மணியளவில் காஞ்சி கலைக்குழுவின் எழுச்சியுடன் தொடங்கியது. திரு. அ. பதுமநாபன் வரவேற்புரை யாற்றினார். திரு. சா. சந்திரேசன் தொடக்கவுரை நிகழ்த்தினார்.

திருக்குறள்மணி புலவர் இறைக்குருவனார் 'தமிழர் கண்ணோட்டம்' மாநாட்டு மலரை வெளியிட்டு உரையாற்றினார். புலவர் கி.த. பச்சையப்பன் மலரின் முதற்படியையும், பாவலர் தமிழேந்தி மலரின் இரண்டாம் படியையும் பெற்றுக்கொண்டு ஏற்புரையாற்றினர்.

தொடர்ந்து திரு. நா. அருணாசலம் அவர்கள் தலைமையில் தொழில் அரங்கமும், திரு. ப. விசேந்திரன் அவர்கள் தலைமையில் 'தொழில் – வணிகத்தில் தமிழ் இளைஞர்களின் பங்கு' பற்றிய மாணவர் அரங்கமும், பாவலர் தணிகைச்செல்வன் அவர்கள் தலைமையில் 'கிட்ட நெருங்குது நேரம்' என்னுந் தலைப்பில் பாவரங்கமும், திரு. தா. வெள்ளையன் தலைமையில் வணிக அரங்கமும், திரு. பெ. மணியரசன் அவர்கள் தலைமையில் பொது அரங்கமும் நடைபெற்றன.

திரு வழக்கறிஞர் பூ.அர. குப்புசாமி, திரு தியாகு, முனைவர் சுப. வீரபாண்டியன், 'விடுதலை' இராசேந்திரன், பாவலர் இன்குலாபு, பாவலர் அறிவுமதி, திரு. கி. வெங்கடராமன், திரு. நா. வைகறை, இராசேந்திரன் உள்ளிட்ட அறிஞர்களும் தொழில் – வணிகத்துறை சார்ந்தோர் பலரும் மாநாட்டில் பங்கேற்றனர். திரு. செல்வநம்பி (யோகநாதன்) நன்றி நவின்றார்.

## நெல்லையில் பாவலரேறு நினைவுக் கருத்தரங்கம்

தி.பி. 2029 கடகம் 3 ஞாயிறு (19.7.98) அன்று, திருநெல்வேலிச் சீதாபதி விடுதி – பாவாணர் அரங்கில் பாவலரேறு ஐயா அவர்களின் மூன்றாம் ஆண்டு நினைவுக் கருத்தரங்கம் திரு.சி.தெ. அமுதன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. திரு. சி. செல்லச்சாமி வரவேற்றுப் பேசினார்.

சொல்லாய்வு அறிஞர் அருளியார், புலவர் தமிழ்மாறன்

(த.நா.ம.இலெ.க.), ஈகி பெ.சு. மணி, மருத்துவர் அ.மு. சுந்தரவிநாயகம் (திருவள்ளுவர் கழகம்), முனைவர் பா. வளனரசு, முனைவர் ச.வே. சுப்பிரமணியம், திரு. ஆ. சிவராமகிருட்டிணன் (தென்காசித் திருவள்ளுவர் கழகம்), திரு. அதியமான் (உ.த.மு.க.) புலவர் செ. கமால் (மாவட்டத் தமிழாசிரியர் கழகம்), இரா. சமுத்திரபாண்டியன், திரு.ச. முத்தமிழ் (தி.க.) ஆகியோர் உரையாற்றினர். திரு. கி.ந. மணி நன்றி நவின்றார்.

**தமிழ்நாடு இளைஞர் பேரவை, தி.க. (இரா.) சார்பில்**
**புதுவையில் பாவலரேறு நினைவேந்தல் நிகழ்ச்சி**

தமிழ்நாடு இளைஞர் பேரவை, திராவிடர் கழகம் (இரா) ஆகியவற்றின் சார்பில் தி.பி. 2029 கடகம் 8 வெள்ளி (24.7.98) அன்று புதுவை முதலியார்பேட்டை வானொலித் திடலில் பாவலரேறு ஐயா அவர்களின் மூன்றாம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்ச்சி பேரவைச் செயலர் திரு. சுகுமாரன் தலைமையிலும் தி.க.செயலாளர் திரு. மு.ப. நடராசன் முன்னிலையிலும் நடை பெற்றது. திரு. மா. இருதயராசு (தி.க.) வரவேற்புரை யாற்றினார். திரு. கோகுல்நாத்து (தி.க.) தீர்மானவுரைக்குப் பின் தமிழ்த்தேசப் பொதுவுடைமைக் கட்சிப் பொதுச்செயலாளர் திரு. பெ. மணியரசன், வழக்கறிஞர் தி. இராமதாசு (தமிழின விடுதலைக் கழகம்), ஆறுச்சாமி (தி.க.), ந.மு. தமிழ்மணி (ஈழ மக்கள் ஆதரவுக் கூட்டமைப்பு) ஆகியோர் உரையாற்றினர். திரு. இரா. பாலு (த.இ.பே) நன்றி நவின்றார்.

**பாவேந்தரும் பாவலரேறும் பற்றி இறைக்குருவனார் உரை:**

தி.பி. 2029 கடகம் 9 காரி (25.7.98) அன்று, தஞ்சையில் ம.தி.மு.க. இலக்கிய அணியின் சார்பில் நடைபெற்ற பாவேந்தர் விழாவில் விருந்தினர்களாகக் கலந்துகொண்டு திருக்குறள்மணி புலவர் இறைக் குருவனார் 'பாவேந்தரும் பாவலரேறும்' என்னும் பொருள்பற்றியும், உவமைப் பாவலர் சுரதா 'நான் கண்ட பாவேந்தர்' என்னும் பொருள்பற்றியும் உரையாற்றினர். இவ்வரங்கிற்குத் திரு. சேலம் அசோகன் தலைமை தாங்கினார்.

அன்று (25.7.98) காலை 10 மணியளவில், தேனிசைச் செல்லப்பா குழுவினரின் எழுச்சி இசையுடன் தொடங்கிய முழுநாள் விழாவில் வழக்காடு மன்றம், கருத்தரங்கம், பாவரங்கம், நடன அரங்கம் ஆகிய பல்வேறு நிகழ்ச்சிகள் இடம்பெற்றன. ம.தி.மு.க. பொதுச் செயலாளர் திரு. வைகோ, அவைத்தலைவர் திரு. எல்.கணேசன், பேரா. அபுதுல்காதர், 'சங்கொலி' இதழ்ப் பொறுப்பாசிரியர் திரு.க. திருநாவுக்கரசு முதலானோரும், இலக்கிய அணித்தலைவர் பாவலர்

கோட்டைச்சாமி உள்ளிட்ட கட்சியின் பல்வேறு பொறுப்பினரும் நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டனர்.

**பாவலரேறு மழலையர் பள்ளித் தொடக்கவிழா!**

திருவான்மியூர்த் திருவள்ளுவர் மழலையர் பள்ளியைத் தொடர்ந்து அம்பத்தூர்த் தாய்த்தமிழ்ப் பள்ளி, குன்றத்தூர்ப் பாவேந்தர் தமிழ்வழிப் பள்ளி, சின்னகாவணம் பெஞ்சித்திரனார் மழலையர் பள்ளி, ஈரோடைச் சுவடித் தமிழ்ப் பள்ளி ஆகியனதம், போரூர், குடியேற்றம் – மேற்பட்டி, கோபி, பல்லடம் முதலான இடங்களில் தோன்றி வளர்ந்துவரும் பல்வேறு பள்ளிகளும் பிறவுமாகத் தமிழ்வழி மழலையர் பள்ளிகளின் எண்ணிக்கை பெருகிவருகிறது. இவ்வகை யில் அண்மையில் திருவொற்றியூரில் **பாவலரேறு மழலையர் பள்ளி** தொடங்கப்பட்டுள்ளது.

திருவொற்றியூர்– எண்ணூர்க் கடற்கரைச் சாலையில் அமைந் துள்ள பாவலரேறு மழலையர் பள்ளியின் தொடக்கு விழா, தி.பி. 2029 கடகம் 22 வெள்ளி (7.8.98) காலை 11 மணியளவில் சட்ட மன்ற உறுப்பினர் தி.செ. விசயன் அவர்கள் தலைமையிலும் புலவர் கி.த. பச்சையப்பனார் அவர்கள் முன்னிலையிலும் நடைபெற்றது. திரு. உலகமுதல்வனின் தமிழ் வாழ்த்தொடு தொடங்கிய இவ் விழாவில் திரு.க. இரவிச்சந்திரன் வரவேற்புரை யாற்றினார்.

திருக்குறள்மணி புலவர் இறைக்குருவனார் பள்ளியைத் திறந்து வைத்தார். நகராட்சி மன்றத் தலைவர் தி.வ. விசுவநாதன் பள்ளிச் சேர்க்கைப் படிவத்தை வெளியிட்டார். திரு. மு.க.தா. சுப்பிரமணியன் பள்ளிச் சீருடையை அறிமுகப்படுத்தினார்.

திருவாளர்கள் உலகமுதல்வன், ப. வேலுமணி, வெற்றிச் செழியன், பாரதிதாசன், ஆதித்தமிழன், செல்வராசு, ஆறுமுகம், கே. திருமலை, கே. இராமச்சந்திரன், பெ. சம்பத்துக்குமார், ஏ.எசு. மகாலிங்கம், கோபாலகிருட்டிணன், இளங்கோவன், துரை. தென்னவன், நல்லதம்பி ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். பள்ளித் தாளாளர் திரு. செய்யாளன் நன்றி நவின்றார்.

இப்பள்ளியை நிறுவும் முயற்சியில் பல்லாற்றானும் பெருந் துணை புரிந்த சட்டமன்ற உறுப்பினர் திரு. தி.செ. விசயன் அவர்களும் நகர்மன்றத் தலைவர் தி.வ. விசுவநாதன், பல்வேறு அமைப்புகளைச் சார்ந்த பொறுப்பாளர்கள் பகுதிவாழ் பெருமக்கள் ஆகியோரும் பாராட்டுக்குரியர்.

### முருகன் – அழகி (இரமணி) மணவிழா !

சென்னை – புதுவண்ணை திரு.ந. வெள்ளையன் - செயா இணையர் மகன் திருவளர்செல்வன் முருகனுக்கும், திரு. து. பஞ்சாட்சரம் - பவளம் இணையர் மகள் திருவளர் செல்வி அழகி (இரமணி)க்கும் தி.பி. 2029 ஆடவை 25 வியாழன் (9.7.98) இரவு 7 மணிக்கு, புதுவண்ணையில் சொல்லாய்வு அறிஞர் அருளியார் அவர்கள் தலைமையில் திருமணம் நடைபெற்றது. திரு. உலக முதல்வன் வரவேற்றுப்பேசினார். திருக்குறள்மணி புலவர் இறைக் குருவனார் மணமக்களை வாழ்த்தி உரையாற்றினார். மணமகன் திரு. முருகன் நன்றி நவின்றார்.

### சுடர் – கண்ணன் மணவிழா !

நெடுநாள் தென்மொழி அன்பரும் பாவலரேறு ஐயா அவர்களின் பேரன்புக்குரியவருமான திரு. அ.தெ. தமிழநம்பி அவர்களின் மகள் திருவளர்செல்வி சுடருக்கும் புதுவை. திரு. ஆ. தண்டபாணி அவர்களின் மகன் திருவளர்செல்வன் கண்ணனுக்கும் தி.பி. 2029 ஆடவை 29 திங்கள் (13.7.98) அன்று, புதுவை அரியாங்குப்பத்தில், சொல்லாய்வு அறிஞர் ப. அருளியார் அவர்கள் தலைமையிலும் திரு.க. குணசேகரன் அவர்கள் முன்னிலையிலும் திருமணம் நடைபெற்றது. அறிஞர்கள் பலர் மணமக்களுக்கு வாழ்த்துரை வழங்கினர்.

### திலீபன் – மலர்விழி வாழ்க !

திருவள்ளூர் மாவட்டம் அம்மையார்குப்பம் அருந்தமிழன்பர் திருவளர்செல்வன் திலீபன், திருவளர்செல்வி மலர்விழி ஆகியோர் திருமணம் தி.பி. 2029 ஆடவை 31 அறிவன் (15.7.98) அன்று திருத்தணியில் சிறப்புற நடைபெற்றது. மணமக்களுக்குத் தென்மொழியின் நல்வாழ்த்துகள்!

### வருந்துகிறோம் !

தென்மொழி அன்பரும், தூயதமிழ் ஆர்வலரும், நம் பாவலரேறு ஐயா அவர்களின் மேல் பேரன்புக் கொண்டவருமாகிய திருச்சி இரா. பாண்டியன் (இரா. மருதை) அவர்களின் துணைவியார் பாப்புரத்தினம் அவர்கள் கடந்த தி.பி. 2029 கடகம் 10ஆம் பக்கல் அன்று மறைவெய்தினார் என்பதை மிகவும் வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம். அன்னாரின் குடும்பத்திற்கும் சுற்றத்தார்க்கும் தென்மொழி தன் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறது.

○

# அம்மா தாமரை பெருஞ்சித்திரனார் அமெரிக்கா செல்கை.

அமெரிக்காவில் பணிபுரிந்து வருபவரும் பாவலரேறு ஐயா அவர்களின் மூன்றாம் மருகருமான திரு. ஆறிறைவனும் மகள் செந்தாழையும் பாவலரேறு ஐயா அவர்களையும் அன்னையார் தாமரை யம்மையார் அவர்களையும் அமெரிக்காவுக்கு அழைத்துச் செல்லத் திட்டமிட்டிருந்த நிலையில், எதிர்பாராவண்ணம் ஐயா அவர்களின் பெரும்பிரிவு நேர்ந்துவிட்டது. ஆயினும் அவ்வெண்ணத்தை நிறை வேற்றும் வகையில் அம்மா தாமரை பெருஞ்சித்திரனார் அவர்களை அமெரிக்கா அழைத்துச் செல்ல ஆவன செய்து, அதன்படி தென்மொழி ஆசிரியரான அம்மையார் அவர்கள் மகள் திரு. செந்தாழையுடனும் பேரப்பிள்ளைகள் செல்வன் செந்தணல், செல்வி யாழிசை ஆகியோ ருடனும் கடந்த கடகம் 15 வெள்ளி (31.7.98)யன்று இரவு அமெரிக்காவுக்குச் சென்றுள்ளார்கள். அவர்களைத் திரு. ஆறிறைவன் அவர்கள் தூசான் வானூர்தி நிலையத்தில் வரவேற்று அழைத்துச் சென்றார். அம்மையார் அவர்கள் ஏறத்தாழ இருமாதக் காலம் அங்குத் தங்கித் தமிழ் நாட்டுக்குத் திரும்புவார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

அம்மையார் அவர்களின் மக்களும் மருமக்களும் பேரப்பிள்ளை களும் சென்னை – மீனம்பாக்கம் வானூர்தி நிலையத்தில் வெள்ளி யன்று இரவு வழியனுப்பி வைத்தனர்.

உ.த.மு.க. பொதுச்செயலாளர் திரு. மா.செ. தமிழ்மணி, திரு. தமிழ நம்பி, திரு. தாமரைக்கோ, திரு. ப. பொய்யாமொழி, திரு. தமிழ்ப்பாண்டியன் முதலானோர் வானூர்தி நிலையத்திற்கு வந்திருந்தனர். 'தமிழம்' செ. பன்னீர்ச் செல்வம் – உலகமுதல்வியம்மையார், திரு.அ. சானகியம்மையார், வழக்கறிஞர் கலைமணி ஆகியோரும், பேரா.ம. இலெ. தங்கப்பா, நெல்லை அதியமான், புலவர் இரா. வடிவேலனார், திரு. குழந்தை ஈகவரசன் ஆகியோரும், திரு. பெஞ்சமின்மணி அவர்களும், திரு. 'பாவேந்தர்' இராமலிங்கம், திரு. நிலாவேங்கடவன், திரு. துரை. தென்னவன் முதலானோரும் நேரிலும் அஞ்சல் – தொலைவரி – தொலைபேசி வாயிலாகவும் வாழ்த்துத் தெரிவித்துள்ளனர். ●

## கருநாடக அரசுத் தமிழ்ப்பாட நூல்களில் பாவலரேறு ஐயா அவர்களின் பாக்கள்:

கருநாடக மாநிலத்தில் 4ஆம் வகுப்பு, 9ஆம் வகுப்புப் பள்ளி மாணவர்களுக்கான தமிழ்ப்பாட நூல்களில் பாவலரேறு ஐயா அவர்களின் பாடல்கள் இடம்பெற்றுள்ளன. 4ஆம் வகுப்பு மாணவர்க ளுக்குக் '**காற்றே உன்னை**' எனத் தொடங்கும் பாடலும், 9ஆம் வகுப்பு மாணவர்கட்கு '**வாழ்வும் தாழ்வும்**' என்னுந் தலைப்பிலமைந்த பாடலும் பாடமாக வைக்கப்பெற்றுள்ளன. முன்னது '**பள்ளிப் பறவைகள்**' நூலிலும், பின்னது 'கனிச்சாறு' தொகுதியிலும் உள்ளன.

# உலகத் தமிழின முன்னேற்றக் கழகம் தமிழர் கொற்றம் சார்பில் பாவலரேறு நினைவேந்தல் நிகழ்ச்சி !

உலகத் தமிழின முன்னேற்றக் கழகம், தமிழர் கொற்றம் ஆகிய அமைப்புகளின் சார்பில் தி.பி. 2029 கடகம் 10 ஞாயிறு (26.7.98) அன்று மாலை 5 மணியளவில் ஈரோடை சிவரஞ்சனி விடுதி அரங்கில் பாவலரேறு ஐயா அவர்களின் மூன்றாம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்ச்சி நடைபெற்றது.

திருக்குறள்மணி புலவர் இறைக்குருவனார் தலைமையிலும் திரு செ.நா. குப்பமுத்து ஐயா அவர்கள் முன்னிலையிலும் நடைபெற்ற இந்நிகழ்ச்சி புலவர் கொ. இராமலிங்கத்தின் தமிழ் வாழ்த்துடன் தொடங்கியது. திரு. குறிஞ்சி வரவேற்றுப் பேசினார். உதமு.க. பொதுச் செயலர் திரு. மா.செ. தமிழ்மணி அவர்கள் பாவலரேறு ஐயா அவர்களின் படத்தைத் திறந்து வைத்து உரையாற்றினார். திரு 'பாவேந்தர்' இராமலிங்கம் (பாவேந்தர் மன்றம்), திரு. தி. அ. சண்முகசுந்தரம் திருக்குறட் பேரவை), திரு. தமிழ்நாடன் (தநா.மஇலெக) க. முருகேசன் (தமிழகத் தமிழாசிரியர் கழகம்), புலவர் சோ. கா. அறிவுடைநம்பி (உ.த.மு.க.) திரு. வேலிறையன் (ஆய்வகம்) ஆகியோர் நினைவேந்தல் உரையாற்றினர்.

பாவலர் இரா. வடிவேலனார் 'முனைவர்' பட்டம் பெற்றமை குறித்துப் பாராட்டியும், அவர் எழுதிய 'வெற்றி உன் கையில்' என்னும் நூலை வெளியிட்டும் பாவலர் த. கோவேந்தன் அவர்கள் உரையாற்றினார். நூலின் முதற்படியைப் புலவர் இறைக்குருவனார் பெற்றுக்கொண்டார். சொல்லாய்வு அறிஞர் அருளியார் சிறப்புரை யாற்றினார். புலவர் ப.ஆ. அரங்கநாதன் நன்றி நவின்றார்.

கோபி. பேரா. அரங்கச்செல்வனார், திரு. நிலா. வேங்கடவன், வழக்கறிஞர் சி. சிதம்பரம், திரு. கிருட்டிணன், அவிநாசித் தமிழவேள், திருப்பூர்த் தமிழப்பன், வேலூர்ப் புலவர் குமர. தன்னொளியன், நாமக்கல் இராமசாமி, சேலம் புலவர் வேள்நம்பி, பேரா.க. சுப்பிர மணியம், கோவை பேரா. மு.க. சுப்பிரமணியனார், பேரா. கோவை வாணன், திருச்சி குழந்தை ஈகவரசன், கரடிப்பட்டித் திரு. க. கண்ணன், தகடூர்த் திரு. அருள்மணி, பாவலர் தமிழ்க்குமரன், ஓடை. தமிழரசன் உள்ளிட்ட வெளியூர்–உள்ளூர் அன்பர்கள் இருநூற்றைம்பது பேருக்குமேல் கூட்டத்திற்கு வந்திருந்தனர்.

தமிழ்ப்பணிக்காகப் பாராட்டப் பெறவிருந்த புலவர் அரச மாணிக்கனார் அவர்கள், உடல்நலங் குன்றி மருத்துவமனையில் பண்டுவஞ் செய்யப்பெற்றுக் கட்டாய ஓய்வில் இருத்தலால் அவரைப் பாராட்டும் நிகழ்ச்சி ஒத்திவைக்கப்பட்டது. ○

'தென்மொழி அச்சகம்', சென்னை – 5. தொலைபேசி : 854 7829